வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 19.12.2022 திங்கட்கிழமை | இதழ் : 10 | பக்கங்கள் : 16








# 104 மியன்மார் அகதிகள் மீட்பு; ஐந்து பேர் மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணம் - வடமராட்சி - வெற்றிலைக்கேணி கடற்பரப்புக்கு அண்மையாக மீன்பிடி படகில் தத்தளித்த நிலையில் காப்பாற்றப்பட்ட 104 ரொஹிங்கிய அகதிகள் காங்கேசன்துறை கடற்படை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிறுவன் ஒருவர் உட்பட ஐவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மியன்மாரிலிருந்து பங்களாதேஷுக்கு இடம்பெயர்ந்திருந்த இந்த அகதிகள், அங்கிருந்து இந்தியாவுக்கு தஞ்சம்கோர சென்றிருந்தனர். ஆனால், அங்கிருந்து இந்தோனேஷியா செல்ல முனைந்தனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு அவர்களின் படகு பழுதடைந்தது. இதனால், கடலில் தத்தளித்த வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் 15

## பாதுகாப்பான வேறு நாட்டுக்கு எங்களை அனுப்பி வையுங்கள்!

### ரொஹிங்கிய அகதிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 19

வடமராட்சி கிழக்கு கடலில் தத்தளித்த படகிலிருந்து மீட்கப்பட்ட அகதிகள் தம்மை பாதுகாப்பான வேறு நாட்டுக்கு அனுப்பி வையுங்கள். மியன்மாருக்கு அனுப்ப வேண்டாம் என்று 15

## ரூ. 450 கோடி பெறுமதியான போதைப் பொருட்கள் மீட்பு!

கொழும்பு, டிசெ. 19

புலனாய்வு பிரிவு, கடற்படை என்பன இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையில் இரு படகுகளில் கடத்தப்பட்ட 450 கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், 8 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களில் 15

# பயிரிடப்படாத நிலங்களை அரசுடைமையாக்க திட்டம்!

### சட்டவரைவை திருத்த முடிவு என்கிறார் விவசாய அமைச்சர்!

கொழும்ப, டிசெம்பர் 19

**பயிரிடப்படாத நிலங்களை அரசுடைமை ஆக்குவதற்கான சட்டவரைவுகள் மற்றும் கட்டளைச் சட்டம் என்பவற்றில் திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

"உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்கமைய, சட்டவரைவுகள் மற்றும் கட்டளைச் சட்டம் என்பவற்றில் திருத்தம் மேற்கொள்ள 15

## உதைபந்தாட்ட உலக கிண்ணம் ஆர்ஜென்ரீனாவின் வசமானது! 12

## இந்திய அனுசரணையுடனேயே அரசுடன் நாம் பேச வேண்டும்!

### தமிழரசு தலைவர் மாவை வலியுறுத்து

கிளிநொச்சி, டிசெ. 19

தமிழ் மக்களுக்கான தீர்வு பற்றி பேசுவதாயின் தமிழர்களின் விடுதலையை நேசிக்கும் கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வதேச நாடுகளின் - இந்தியாவின் அனுசரணையுடன் இலங்கை அரசுடன் பேச வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் 75ஆவது ஆண்டு ஆரம்ப விழா நேற்று கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ் 15

### உள்ளூராட்சி தேர்தல்:

## தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய நாளை கூடுகிறது!

கொழும்பு, டிசெ. 19

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து ஆராய்வதற்காக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நாளை செவ்வாய்க்கிழமை கூடி கலைந்துரையாடவுள்ளது.

இதன்போது தேர்தலுக்கான திகதி மற்றும் வேட்புமனுக்களை ஏற்கும் திகதிகள் குறித்து கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என அறியமுடிகின்றது.

அத்துடன், ஏற்கனவே சான்றளிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவேட் 15

## போதைப் பொருள் தொடர்பாக 90,744 பேர் இதுவரையில் கைது!

கொழும்பு, டிசெ. 19

நாடளாவிய ரீதியில் இதுவரை பொலிஸார் முன்னெடுத்த போதைப் பொருட்கள் தொடர்பான சுற்றிவளைப்புகளில் 90 ஆயிரத்து 744 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தி 15

## காணாமலாக்கப்பட்டோரை தேடிய 126 உறவுகள் நேற்று வரை மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 19

காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் சொந்தங்களை தேடி அலைந்ததுடன் போராட்டங்களிலும் பங்கேற்ற 126 பேர் இதுவரை உயிரிழந்தனர் என்று அறிய வருகிறது.

போர் காலத்தில் இராணுவம் மற்றும் அதனுடன் இணைந்து இயங்கிய ஒட்டுக் குழுக்களால் பிடிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 15

## பாணின் விலை யாழில் மாறாது!

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாணின் விலையில் மாற்றம் ஏற்படாது என்று யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்க தலைவர் க. குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

ஒரு இறாத்தல் பாணின் விலை 10 ரூபாயால் குறைவடையும் என்று அகில 15

### ஐ. நா. சபை வழங்கிய

## 34 இலட்சம் டொலர்களை நிராகரித்தது அரசாங்கம்!

கொழும்பு, டிசெ. 19

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்த - மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த - ஐக்கிய நாடுகள் சபை அளித்த 34 இலட்சம் டொலர்களை - சுமார் 120 கோடி ரூபாயை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான 51/1 என்ற தீர்மானம் கடந்த ஒக்ரோபரில் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் நிராகரிக்கப்பட வேண்டும் 15

## இப்படியும் நடக்கிறது...!

இலங்கையில் யார் ஆட்சியில் இருக்கவேண்டும், ஆட்சியில் இருப்பவர்கள் எப்படி இயங்கவேண்டும் என்பதையெல்லாம் நமது நாட்டு மக்கள் தீர்மானிக்க முடியாது.

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு தேர்தலில் தோல்வியடைந்து அம்பாந்தோட்டைக்கு திரும்பிய மகிந்த ராஜபக்ஷ, தான் தோல்வியடைந்ததற்கு இந்திய உளவு அமைப்பான 'றோ'தான் காரணம் என்று பகிரங்கமாகவே குற்றம் சுமத்தியிருந்தார்.

ஆனால், அவரே சொன்னதுபோல நடந்திருந்தாலும், அடுத்து வந்த மைத்திரி- ரணில் ஆட்சி தனது ஆட்சியை ஐந்து ஆண்டுகளுக்கு கொண்டுநகர்த்த முடிந்திருந்தாலும், மீண்டும் மகிந்தவின் ஆதரவுடன் அவரின் தம்பி கோட்டாபய அறுபத்து ஒன்பது இலட்சம் மக்களின் அமோக ஆதரவுடன் ஆட்சியமைப்பதை யாராலும் தடுக்க முடியவில்லை.

மக்களே அதனைத் தீர்மானித்தனர். ஆனால், அப்படியோர் அசுர பலத்துடன் ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியில் அமர்ந்தபோதிலும் அவர்களால் ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இருக்க முடியவில்லை.

நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியில் சிக்குண்ட மக்கள் வரலாற்றில் இல்லாதவாறு எழுச்சிகொண்டு வீதிக்கு இறங்கியதால் அவர்கள் ஆட்சியைவிட்டு ஓடவேண்டியதாயிற்று.

மக்கள் என்னவோ தன்னெழுச்சியாக அந்தப் போராட்டங்களை நடத்தியதாகக் கூறப்பட்டாலும் அதன் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது இன்றுவரை பேசப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது.

அண்மையில், கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட வைபவம் ஒன்று பல்கலைக்கழக சபா மண்டபத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் கலந்துகொண்ட சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, அந்த வைபவத்தில் கலந்துகொண்ட தனது பழைய நண்பர்கள் சிலருடன் மனம்விட்டு கதைத்துக்கொண்டிருந்ததை கேட்டுக்கொண்டிருந்த (மனதில் படம் பிடித்துக் கொண்டிருந்த) ஒருவர் கொழும்பில் ஊடகர் ஒருவருக்கு அவற்றை மறுஒளிபரப்புச் செய்ய, அதனை அந்த ஊடகர் தனது பத்தியில் விபரித்திருக்கிறார்.

கடந்த ஜூலை ஒன்பதாம் திகதியன்று ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியபோது, நாட்டின் மூன்றாவது குடிமகனான சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, தனக்கு அப்போது ஏற்பட்ட நெருக்கடியான நிலைமை தொடர்பாக அந்த நண்பரிடம் விபரித்திருக்கிறார்.

இந்த நாட்டின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் எந்த வகையிலும் பாதுகாப்பதே தனது ஒரே குறிக்கோளாக இருந்தது என்றும், அன்றைய நாள் தான் ஒரு சிறுதவறை செய்திருந்தாலும் நாட்டின் ஜனநாயகம் இல்லாமல் போய் இருந்திருக்கும் எனவும் கூறியிருக்கிறார் சபாநாயகர்.

சில சமயங்களில் வெளிநாட்டு தூதுவர்கள் மிரட்டும் பாணியில் தன்னோடு உரையாடினர் என்றும் இவற்றை இப்படித்தான் செய்ய வேண்டும் எனவும் மிரட்டினர். அவ்வாறு நடக்கவில்லை என்றால் சில நிமிடங்களில் நிலைமையை தாம் கட்டுப்படுத்தமுடியாமல் செய்வோம் என்றும் மிரட்டினார்களாம்.

'அன்று அவர்களிடம் நான் ஒரே ஒரு வார்த்தைதான் சொன்னேன். நான் எது செய்தாலும், எமது நாட்டின் அரசமைப்பு என்னிடம் உள்ளது. அதில் ஓர் எழுத்தைக்கூட விடமாட்டேன். அன்று நாட்டுக்காக எம்மால் முடிந்த அனைத்தையும் செய்தோம். நாட்டில் ஜனநாயகத்தையும், அமைதியையும் சட்டத்தையும் பாதுகாக்க எம்மால் முடிந்தது.' என்று விபரித்திருக்கிறார் சபாநாயகர்.

இந்த விபரங்களை தனது பத்தியில் விபரித்துள்ளள அந்த ஊடகர்,

'சிறீ லங்கா வரலாற்றில் இதற்கு முன்னர் இப்படியொரு பிரச்னையை நாம் எதிர்கொண்டதில்லை. நாட்டின் பிரச்னைகளை கடவுளால் மட்டுமே தீர்க்க முடியும் என்று நினைத்தவர்கள் இருந்தனர்.

ஏனெனில், நாட்டின் தலைவர் சென்ற பிறகு நாட்டுக்கு என்ன நடக்கும், நாடு எவ்வாறு முன்னேறும் எனப் பல விடயங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன. ஆனால், அந்த பிரச்னைகளை எல்லாம் நாம் எதிர்கொண்டோம். யாரையும் தொந்தரவு செய்யாத வகையில் எம்மால் செயல்பட முடிந்தது. இப்போது அந்த கெட்ட நேரம் முடிந்துவிட்டது' என்று கூறியிருக்கிறார் சபாநாயகர்.

ரணில் இன்று ஆட்சியில் இருப்பதற்கு நமது நாட்டு அரசமைப்பு மட்டுமே காரணமாகியிருக்கின்றது. அவர் எந்தவொரு நாட்டுக்காவது அச்சுறுத்தலாக மாறும்வரை அவர் பதவியில் இருப்பார். அப்படியில்லையெனில் அவர் தொடர்வாரா என்பதை நமது மக்கள் தீர்மானிக்கப் போவதில்லை என்பதையே சபாநாயகரின் இந்த சம்பாஷணை புலப்படுத்துகின்றது.!

- ஊர்க்குருவி

# திருவெம்பாவை திருவிழாவை வழமைபோல் நடத்துமாறுகோரி காரைநகரில் போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 19



காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவம்பாவை உற்சவத்தை வழமை போல் சிறப்பாக நடாத்தக் கோரி காரைநகரில் நேற்று ஞாயிற்றுக் கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் நிறைவில் ஆலய ஆதீன கர்த்தாவிடம் மகஜரை கையளிப்பதற்கு அவரை அழைத்தவேளை அவர் அங்கு இல்லை என அவரின் உறவினர்கள் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து முரண் பாடு தோன்றியது. பின்னர் மகஜர் ஆலய வாயிலில் வைக்கப்பட்டது.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

வரலாற்று பிரசித்தி பெற்ற ஈழத்து சிதம்பரம் என வர்ணிக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் திருவெம்பாவை உற்சவத்தை நடத்தாமல் இருப்பதற்கு ஆலயத்தை பாலஸ்தாபனம் செய்வதற்கு நிர்வாகத்தினரால் பலதரப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டது.

இதனையடுத்து திருவிழா உபயகாரர்களால் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டதன் அடிப்படையில், பாலஸ்தாபனம் செய்ய இடைக்கால தடை உத்தரவினை ஊர்காவற்றுறை நீதிமன்றம் வழங்கி இருந்தது. ஆனால், நீதிமன்ற தீர்ப்புக்கு முன்னர் பாலஸ்தானம் செய்யப்பட்டது.

நீதிமன்ற தீர்ப்பை அடுத்து திருவெம்பாவை உற்சவம் நடைபெறும் என்ற அடிப்படையில் ஏற்பாடுகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் திருவெம்பாவை உற்சவத்தை கொரோனா காலத்தில் நடத்தியது போல காலை 5 தொடக்கம் 7 மணிக்குள் திருவிழாவை நடத்துவதற்கு ஆலய நிர்வாகத்தினர் முயற்சி எடுத்து வந்துள்ளனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் திருவம்பாவை உற்சவத்தை வழமை போல் சிறப்பாக முன்னெடுப்பதற்கு ஆலய நிர்வாகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கோரி காரைநகர் மக்களால் இன்றைய தினம் (நேற்று) இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது - என்றனர்.

புதிய வீதி காரைநகரில் இருந்து ஆரம்பமான இந்தப் போராட்டமானது பேரணியாக சென்று ஈழத்துச் சிதம்பரத்துக்கு முன்னால் நிறைவுற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நந்திக் கொடிகளையும் பதாதைகளையும் ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(ஐ-02)

# தேர்தலை ஒத்திப்போடுமாறு பெரமுன கட்சி கோரிக்கை!

## ஜனாதிபதியை சந்தித்து விடுத்தது

கொழும்பு, டிசெ. 19

உள்ளூராட்சி சபை தேர்தலை சில மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பொது ஜன பெரமுன ஆட்சியிலுள்ள உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாநகர சபைகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுஜன பெரமுன கட்சியுடன் தொடர்புடைய 47 உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் கடந்த புதன்கிழமை அரச தலைவரை சந்தித்து இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் தேர்தலை எதிர்கொள்வதற்கான தகுந்த சூழலில் மக்கள் இல்லை. அத்துடன், உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள், தேர்தலுக்காக பெரிய செலவினங்களை மேற்கொள்வது அரசாங்கத்துக்கும் தங்களுக்கும் சிரமம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவர்களின் கோரிக்கைக்கு பதிலளித்துள்ள ஜனாதிபதி, தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட துறை தேர்தல்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் - என்று கூறினார்.

இந்தச் சந்திப்பில், பிரதமர் தினேஷ் குணவர்த்தன, பொது ஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் அமைச்சர் ஜானக வக்கம்புர ஆகியோரும் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

# ஏழு மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

கொழும்பு, டிசெ. 19

தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு திசையில் தென் மேற்கு வங்காள விரிகுடாவை நோக்கி நகரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் கிழக்கு, ஊவா, தென், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் பொலநறுவை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும். பிற்பகல் அல்லது இரவு வேளையில் நாட்டின் ஏனைய பகுதிகளில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான கடும் மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய சில இடங்களில் 75 மில்லிமீற்றர் வரையில் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

(ஐ)

# தெய்வீக திருவரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 19

"மார்கழியில் மாணிக்கவாசகர் தெய்வீகத் திருவரங்கு', என்ற இணையவழி நிகழ்ச்சி எதிர்வரும் ஜனவரி 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இந்த நிகழ்ச்சி இணையவழியில் இலங்கை நேரம் இரவு 7 மணிக்கு தினமும் நடைபெறும்.

இந்த நிகழ்வில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் சூம் செயலி வழியே 417 892 9023 என்ற அடையாள எண்ணில் 202811 கடவுச்சொல்லைப் பயன்படுத்தி இணைய முடியும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
19.12.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# புலம்பெயர் அமைப்புக்கள் புரிந்துகொள்ள வேண்டியது?

சில புலம்பெயர் அமைப்புகள் ஒன்றிணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்றன. அரசாங்கத்தோடு பேசுவதாயின் எவ்வாறான விடயங்களை முன்னிலைப்படுத்தி பேசவேண்டுமென்று சுட்டிக்காட்டியிருக்கின்றன. அதாவது, தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், தமிழ் மக்கள் விட்டுக்கொடுக்க முடியாத தன்னாட்சி உரிமையுள்ளவர்கள், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் வரலாற்று ரீதியாகவும் பாரம்பரிய ரீதியாகவும் பிரித்தெடுக்க முடியாத ஒன்றிணைந்த தமிழர் தாயகமாக இருந்து வந்துள்ளது - இந்த மூன்று அடிப்படை கோட்பாடுகளையும் இலங்கை அரசாங்கம் பகிரங்கமாக அங்கீகரித்த பின்னர்தான் பேச்சு தொடங்கப்பட வேண்டும். இதேவேளை, தமிழ் மக்கள் பேரவையால் முன்வைக்கப்பட்ட தீர்வு ஆலோசனையில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று, புதிய அரசமைப்புக்கு முன்னர், ‘பெரியவெள்ளி’ ஒப்பந்தம் அல்லது ‘டேய்ற்ரன்’ ஒப்பந்தம் போன்றதோர் ஒப்பந்தம் அவசியமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அவ்வாறானதொரு யோசனையை முன்வைத்த தமிழ் மக்கள் பேரவை நகைப்புக்கிடமான முறையில் உதிர்ந்து போய்விட்டது. மேலும், அதனுடன் இணைந்திருந்த கட்சிகள் பின்னர் மூன்று அணிகளாகத் தேர்தலில் மோதின. ஓர் ஆலோசனையை முன்வைக்கும் அமைப்பானது எப்போது செயலிழந்து போகின்றதோ அப்போதே குறித்த அமைப்பின் யோசனைகளும் அநாதையாகி விடுகின்றன. விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை இப்போதுள்ள அரசியல் கட்சிகளால் முன்வைக்க முடியுமா? ஒருபோதும் முடியாது. ஏனெனில், விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை அவர்களின் இராணுவ பலத்திலிருந்து பிரிக்க முடியாது.

எனவே, இந்த பின்புலத்தில் சிந்தித்தால், இவ்வாறான நிபந்தனைகளை - கோரிக்கைகளை முன்வைத்து கொழும்புடன் பேசுவதாயின் அவ்வாறானதொரு பேச்சு ஒருபோதுமே இடம்பெறாது. தவிர, விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரிக்க முடியாத இராணுவ பலத்துடனிருந்த காலத்தில்கூட, பேச்சுக்கு செல்கின்றபோது, ரணில் அரசாங்கத்திடம் இவ்வாறான நிபந்தனைகளை முன்வைக்கவில்லை. வன்னியில் பிரபாகரன் பங்குகொண்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அன்ரன் பாலசிங்கம் சுயநிர்ணய உரிமை தொடர்பில்கூட பேசவில்லை.

மாறாக, உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றியே பேசியிருந்தார். உண்மையில், அரசியலில் உள்ளக சுயநிர்ணய உரிமையென்று ஒன்றில்லை. சுயநிர்ணய உரிமையை உள்ளக - வெளியக உரிமைகளென்று பிரிக்க முடியாது. ஆனாலும் பாலசிங்கம் உள்ளக சுயநிர்ணய உரிமையென்று அழுத்திக் குறிப்பிட்டிருந்தார். பாலசிங்கம் சுயநிர்ணய உரிமையென்றுதான் கூறியிருக்க வேண்டும். ஆனால், அதனை தவிர்த்து, உள்ளக சுயநிர்ணய உரிமையென்றுதான் குறிப்பிட்டிருந்தார். பிரபாகரனை அருகில் வைத்துக் கொண்டே அவர் அவ்வாறு கூறியிருந்தார். உள்ளக சுயநிர்ணய உரிமையென்பதன் மூலம் பாலசிங்கம் கூற முற்பட்டதென்ன? பேச்சு என்று செல்கின்ற போது, தனிநாட்டுக்கான நிலைப்பாட்டுடன் செல்ல முடியாது. தனிநாட்டை முன்வைத்தால் அரசாங்கத்துடன் பேச முடியாது. அதனை வெளித்தரப்புக்களும் ஏற்றுக்கொள்ளாது.

இராணுவ ரீதியான பலத்துடனிருந்த விடுதலைப் புலிகள் இயக்கமே பேச்சு ஒன்றுக்கு செல்கின்றபோது, உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்பில் பேசியிருக்கின்றபோது, எந்தவொரு பலமுமில்லாத - சில பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே வைத்திருக்கும் தமிழ்த் தேசிய கட்சிகள் எவ்வாறு இவ்வாறான நிபந்தனைகளை முன்வைக்க முடியும்? இந்த விடயங்கள் தொடர்பில் புலம்பெயர் அமைப்புகள் என்போர் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

மேற்குலகின் தாராளவாத ஜனநாயகச் சூழலுக்குள் வாழ்ந்து கொண்டு கற்பனை செய்வதன் மூலம், தாயக மக்களுக்கு எந்தவொரு நன்மையையும் செய்துவிட முடியாது. குறித்த அறிக்கையில் அனைத்து புலம்பெயர் அமைப்புகளும் உள்ளடங்கவில்லை. மேற்குலக நாடுகளுடன் தொடர்பிலிருக்கும் முன்னணி புலம்பெயர் அமைப்புகள் எவையும் குறித்த அறிக்கையோடு தொடர்புறவில்லை. எனினும், அவ்வாறானவர்களும் தாயக நிலைமையை கருத்தில் கொண்டுதான் தங்களின் கருத்துக்களை முன்வைக்க வேண்டும். இன்றுள்ள நிலைமைகளை கருத்தில் கொண்டுதான், தாயக கட்சிகளுக்கான அறிவுரையைக்கூற முற்பட வேண்டும். இன்றுள்ள சூழலில் கிடைக்கும் வாய்ப்புக்களை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வதற்கான தார்மீக ஆதரவைத்தான் புலம்பெயர் அமைப்புகள் வலியுறுத்த வேண்டும். மேற்கின் ஜனநாயக சூழலுக்குள் சீவிக்கும் அமைப்புகள் தீவிர நிலைப்பாடுள்ளவர்களாக தங்களை காண்பிப்பது அடிப்படையிலேயே தவறானது.

# 54 அமைச்சர்கள், எம். பிக்களால் ரூ. 42 கோடி மின் கட்டணம் நிலுவை

*கொழும்பு, டிசெ. 19*

*54 அமைச்சர்கள் பயன்படுத்தும் மின் சாரத்துக்காக அறவிடப்படும் கட்டண நிலுவை 42 கோடி ரூபாய்க்கு மேல் என்று இலங்கை மின்சார சபை தொழில்சங்கக் கூட்டமைப்பின் அழைப்பாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.*

*2022ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதிக்குள் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாத முன்னாள் மற்றும் தற்போதைய அமைச்சர்களுக்குச் சொந்தமான அமைச்சுக்களில் இருந்து சுமார் 42 கோடி ரூபாய் நிலுவை வசூலிக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக் காட்டினார்.*

*ஜே. பெரேரா ரூ. 53 இலட்சத்து 91 ஆயிரத்து 913 ரூபாய், டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன ரூ. 16 இலட்சத்து 28 ஆயிரத்து 523 ரூபாய், அதனுடன் சேர்த்து 6 இலட்சத்து 60 ஆயிரத்து 485 ரூபாய், எஸ். பி. பி. தசநாயக்க ரூ. 14 இலட்சத்து 9 ஆயிரத்து 15 ஆர்.எம்.சி. ரத்நாயக்க ரூ. 14 இலட்சத்து 27 ஆயிரத்து 479, ஆர்.பி. குணவர்த்தன ரூ. 13 இலட்சத்து 56 ஆயிரத்து 927 . பத்திரண ரூ. 12 இலட்சத்து 37 ஆயிரத்து 43, டபிள்யூ. எம். டி. பி. ஏக்கநாயக்க ரூ. 11 இலட்சத்து 28 ஆயிரத்து 444.*

*சந்திரசிறி கஜதீர ரூ. 10 இலட்சத்து 48 ஆயிரத்து 703, ரிஷாத் பதுதீன் ரூ. 9 இலட்சத்து 61 ஆயிரத்து 879, கே.டி.எம்.சி. பண்டார ரூ. 8 இலட்சத்து 93 ஆயிரத்து 75, எச். ஜி. வீரகோன் ரூ. 801,748.75, சரத் பொன்சேகா ரூ. 7 இலட்சத்து 67 ஆயிரத்து 561, பி. ஹாரிசன் ரூ. 6 இலட்சத்து 91 ஆயிரத்து 75, பி. எம். எம். டி. பன்னக்கா ரூ. 5 இலட்சத்து 40 ஆயிரத்து 376, ரூ. போகொல்லாகம ரூ. 4 இலட்சத்து 75 ஆயிரத்து 290, ஏ.சி.எச். டி சொய்சா ரூ. 4 இலட்சத்து 83 ஆயிரத்து 86.*

*ஏ. தாதன்கொட ரூ. 4 இலட்சத்து 31 ஆயிரத்து 97 ஆனந்த சங்கரி ரூ. 3 இலட்சத்து 90 ஆயிரத்து 761 இம்தியாஸ் பக்கீர் மாக்கார். ரூ. 3 இலட்சத்து 57 ஆயிரத்து 311, ஆர். டி. ஏ. சிறிசேன ரூ. 3 இலட்சத்து 55 ஆயிரத்து 765, ஹரீன் பெர்னாண்டோ ரூ. 2 இலட்சத்து 75 ஆயிரத்து 28, எல்.ஜி.ஜே. செனவிரத்ன 2 இலட்சத்து 62 ஆயிரத்து 447, டபிள்யூ. அபேவர்த்தன ரூ. 2 இலட்சத்து 46 ஆயிரத்து 105, டி.டி.கே. 2 இலட்சத்து 39 ஆயிரத்து 988, அழகப்பெரும, என்.எச்.ஆர். சேனாரத்ன ரூ. 2 இலட்சத்து 27 ஆயிரத்து 157.81, ஜி. டபிள்யூ.பி. சொய்சா ரூ. ஒரு இலட்சத்து 99 ஆயிரத்து 434, ஜே. வீரக்கும்புர ரூ. ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து 749, ஏ.டி. பிரேமதாச ரூ. ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 146, பி. ஹாரிசன் ரூ. ஒரு இலட்சத்து 60ஆயிரத்து 507, அநுர பிரியதர்ஷன யாப்பா ரூ. ஒரு இலட்சத்து 92 ஆயிரத்து 705 , எச்.எம். பௌசி ரூ. ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 460, எஸ். புஞ்சிநிலமே ரூ. ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 501.*

*இ. பிரேமரத்ன ரூ. ஒரு இலட்சத்து 24 ஆயரத்து 531, எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா ரூ. ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 333, கே. டி. விக்கிரமரத்ன ரூ. ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 73, டி. ஜே. ஏ. எம். தசநாயக்க ரூ. ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 73, ஏ.எல்.எம். அதாவுல்லா ரூ. 96 ஆயிரத்து 166, விமலேந்திரன் ரூ. 89 ஆயிரத்து 443, ஜே. சி. அலவத்வல ரூ. 87 ஆயிரத்து156, திஸ்ஸ அத்தநாயக்க ரூ. 85 ஆயிரத்து 244, கதிர்காமர் ரூ. 73 ஆயிரத்து 968, திஸ்ஸ கரலியத்த ரூ. 71 ஆயிரத்து 641, ஆர்.எம்.ஆர்.எம். பண்டார ரூ. 53 ஆயிரத்து 846, ஜே. குணவர்த்தன ரூ. 51 ஆயிரத்து 960, ரூ. விக்கிரமநாயக்க ரூ. 50 ஆயிரத்து 535, எம்.எஃப். முஸ்தபா ரூ. 38 ஆயிரத்து 371, எஸ்.பி. திசாநாயக்க ரூ. 32 ஆயிரத்து 367, ஜி. சுசந்த புஞ்சிநிலமே. ரூ. 31 ஆயிரத்து 676, எம். எம்.ஏ. ஹலீம் ரூ. 4 ஆயிரத்து 347, எம். அளுத்கம ஆயிரத்து 85 ரூபாய் நிலுவை வைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.*

*(ஐ-சி)*

# 4 வயது சிறுவனின் வாயில் சூடு வைத்த ஆசிரியருக்கு மறியல்!

*யாழ்ப்பாணம், டிசெ. 19*

*வட்டுக்கோட்டை முன்பள்ளி மாணவனுக்கு வாயில் சூடு வைத்த ஆசிரியரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.*

*கடந்த வாரம் வட்டுக்கோட்டை - துணவி பகுதியிலுள்ள முன்பள்ளி ஒன்றின் ஆசிரியர் மாணவன் தகாத வார்த்தை பேசினான் என கூறி நெருப்புக் குச்சியால் வாயில் சுட்டுள்ளார்.*

*இதில், பாதிக்கப்பட்ட முன்பள்ளி மாணவன் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.*

*பொலிஸாரின் விசாரணையை தொடர்ந்து கைது செய்யப்பட்ட ஆசிரியர் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் நாளை வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.*

*(ஐ)*

# தினேஷ் ஷாப்டர் கொலை; விசாரணைகள் தீவிரம்!

கொழும்பு, டிசெ. 19


தொழிலதிபர் தினேஷ் ஷாப்டர் கொலை தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன்படி, பொரளை மயானத்தை சுற்றியுள்ள சி. சி. ரீ. வி. கமெராக்களில் பதிவான காட்சிகள் மேலதிக விசாரணைகளுக்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமஸிடம் ஆறரை மணித்தியாலங்கள் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
நீங்கள் நினைத்ததை நடத்துவீர்கள். வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். நிதிநிலை உயரும். குடும்பத்தினர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பிள்ளைகளால் பெருமிதம் அடைவீர்கள். திட்ட மிட்ட செயல் இன்று நிறைவேறும்.

**மிதுனம்**
தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும். தடைபட்ட செயலை நிறைவேற்றுவீர். பணியிடத்தில் முன்னேற்றம் காண கடுமையாக உழைப்பீர்கள்.

**கடகம்**
குடும்பத்தினர் விருப்பம் அறிந்து செயல்படுவீர்கள். சகோதரர்களால் நன்மை ஏற்படும். முயற்சி பலித்தாமாகும். நிதிநிலை உயரும். வியாபாரத்தில் அதிரடிமாற்றம் செய்வீர்கள். லாபம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்**
கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னையை சரி செய்வீர்கள். கூடுதல் வருமானத்திற்கு முயற்சிப்பீர்கள்.

**கன்னி**
முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் எண்ணம் பூர்த்தியாகும். நீங்கள் ஈடுபடும் செயலில் முன்னேற்றம் காணும் நாள். வர வேண்டிய பணம் வந்து சேரும். தொழிலை விரிவு செய்வீர்.

**துலாம்**
வெளியூர் பயணத்தால் அலைச்சல் ஏற்படும். முயற்சி தாமதமாகும். விரும்பிய செயல்களில் தடை ஏற்படும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். குடும்பத்தினர் வகையில் திடீர் செலவு தோன்றும்.

**விருட்சிகம்**
புதிய முயற்சி இன்று வேண்டாம். வேலை தேடிய வர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வந்து சேரும் நாள். வழக்கமான செயல்களில் லாபம் காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு**
தொழிலில் நீங்கள் எதிர்பார்த்த பணம் வந்து சேரும் நாள். முயற்சி பலிக்கும். கவனமாக செயல்பட வேண்டிய நாள். வேலை பார்க்கும் இடத்தில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள்.

**மகரம்**
நேற்று இழுபறியாக இருந்து வந்த செயல் இன்று நிறைவேறும். எந்த ஒன்றிலும் பலமுறை யோசித்து செயல்படுவது உங்களுக்கு நன்மை தரும். நிதி நிலை சீராகும்.

**கும்பம்**
புதிய முயற்சி இன்று வேண்டாம். வெளியூர் பயணங்களில் விழிப்புணர்வு தேவை. உங்கள் எதிர்பார்ப்பு இழுபறியாகும். அடுத்தவருக்கு அறிவுரை கூறுதல்.

**மீனம்**
மனதில் உற்சாகம் அதிகரிக்கும். நீங்கள் விரும்பியதை இன்று அடைவீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். உறவினர்களிடம் செல்வாக்கு அதிகரிக்கும். கவனத்துடன் செயல்படுவீர்கள். உங்கள் செயலால் குடும்பம் மகிழ்ச்சி அடையும்.

# ரூ.1,585 கோடி செலவில் 3,500 வீடுகள் ஈழத் தமிழருக்காக அமைக்கப்படும்!

## தமிழக அமைச்சர் அறிவிப்பு

இராமநாதபுரம், டிசெ. 19

தமிழகத்தில் 19 மாவட்டங்களில் 317 கோடி ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் ஆயிரத்து 585 கோடி ரூபாய் செலவில் மறுவாழ்வுத்துறை மூலம் இலங்கை தமிழர்களுக்கு 3 ஆயிரத்து 500 வீடுகள் கட்டும் பணி நடந்து வருகிறது என்று சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான் தெரிவித்தார்.

இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் அவர் பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் சிறுபான்மையினர் தனி அலுவலர் நியமிக்க வேண்டும் என கேட்டுக்கொண்ட தற்கிணங்க முதல் கட்டமாக 5 மாவட்டங்களில் தனி அலுவலர்களை முதல்வர் நியமித்தார். 2ஆம் கட்டமாக 5 மாவட்டங்களில் நியமிக்கப்பட உள்ளனர். அதில் முதலாவதாக இராமநாதபுரம் மாவட்டத்தில் தனி அலுவலர் நியமிக்கப்படுவார். இலங்கை தமிழர்களுக்காக ரூ.317 கோடி செலவில் 3,500 வீடுகள் கட்டும் பணி 19 மாவட்டங்களில் நடக்கிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

# அ.தி.மு.க., தே.மு.தி.க. கட்சிகள் பா.ஜ.க. கூட்டணியிலேயே உள்ளன!

## அண்ணாமலை தெரிவிப்பு



கோவை, டிசெ. 19

2024 என்பது மோடிக்கான தேர்தல். அ.தி.மு.க., பா.ம.க., தே. மு. தி. க. ஆகிய கட்சிகள் தேசிய ஜனநாயக கூட்டணி யில் உள்ளன. அதில், குழப்பம் இல்லை என்று பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

இதுதொடர்பாக கோவையில் நேற்றுமுன் தினம் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தி. மு. க. அமைச்சர்களுக்கு ஒரே வேலை உதயநிதியை புகழ்வதுதான். அவர்கள் பேசுவதை கேட்பதற்கே துரதிர்ஷ்டவசமாக உள்ளது. உதயநிதி ஸ்டாலினுக்கு தகவல், ஒளி பரப்புத் துறைதான் சரியாக இருக்கும். எல்லோரும் சினிமா எப்படி எடுக்கிறார்கள், எத்தனை படங்களை வெளியிடலாம் எனப் பார்க்க சரியாக இருக்கும். இதன்மூலம் திரைத் துறையை முதலிடத்துக்கு உதய நிதி கொண்டுவந்துவிடுவார்.

அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் சி. வி. சண்முகம் தி. மு. கவோடு பா. ஜ. க கூட்டணி வைக்கும் என்று கூறியுள்ளது குறித்து கேட்டதற்கு, "எந்தக் கட்சி எந்த கட்சியோடு கூட்டணி வைக்கும் என்பதை அந்தந்த கட்சியில் உள்ள தலைவர்கள் பேசினால் சரியாக இருக் கும். ஊகங்களுக்கு எப்படி பதில் சொல்ல முடியும்.

இன்றைய திகதியில் பா. ஜ. க. எப்படி வளர்ந்து வருகிறது என்பது அனைவருக்கும் தெரியும். பா. ஜ. க. இங்கே அரசியலில் இருப்பது ஆட்சி அமைக்க வேண்டும் என்பதற்காகத் தான். அதற்குத்தான் கட்சியை நடத்தி வருகிறோம். தி. மு. க. கூட்ட ணியில் இருக்கும் கட்சிகளை போல, நாமும் உயிர்வாழ கூடவே இருக் கலாம் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. சரியான, நேரம் காலம் வரும் போது பேசுவோம் - என்றார். (ஐ)

# மக்கள் படும் துன்பம் தி.மு.கவை வீழ்த்தும்!

## பன்னீர்செல்வம் அறிக்கை



சென்னை, டிசெ. 19

"தி. மு. க. அரசு மக்களை வஞ்சிக்கும் அரசாகம், மக்கள் விரோத அரசு, ஏழைகளுக்கு எதிரான அரசாங்கம் என்பதை கடந்த ஒன்றரை ஆண்டு கால அனுபவத்தில் மக்கள் நன்கு புரிந்து கொண்டுவிட்டார்கள்" என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பெற்றோல் விலை குறைக்கப்படும், டீசல் விலை குறைக்கப்படும், மின் கட்டணம் குறைக்கப்படும் என்று பல புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டு ஆட்சிக்கு வந்த தி. மு. க., கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இந்த வாக்குறுதிகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, அனைத்துக் கட்டணங்களையும், வரிகளையும் உயர்த்தியுள்ளது. இந் நிலையில், ஆவின் உற்பத்திகளின் விலையை உயர்த்தியுள்ளது.

மக்களை அரவணைத்துப் பேணி காக்கும் அரசனை உலகம் வணங்கும் என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கிணங்க, உயர்த்தப்பட்ட ஆவின் பொருட்களின் விலையை உடனடியாக குறைக்க வேண்டுமென்று தமிழக முதல்வரை அ. தி. மு. க. சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இல்லையெனில், மக்கள்படும் துன்பம் தி.மு.க ஆட்சியை வீழ்த்தி விடும்" என்று அவர் கூறியுள்ளார். (ஐ)

# தமிழர் பாரம்பரியத்தை காக்கவே ஜல்லிக்கட்டு!



சென்னை, டிசெ. 19

தமிழர் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை பாதுகாக்கவே ஜல்லிக்கட்டு நடத்தப்படுவதாக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கில் தமிழ்நாடு அரசு எழுத்துப்பூர்வமான வாதங்களை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

அதில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு சட்டம் இயற்றப்பட்டு அதற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டிருப்பதாக தமிழக அரசு கூறியுள்ளது. காளைகளின் நல்வாழ்வை உறுதிசெய்யும் வகையில் அனைத்து விதிமுறைகளும் பின்பற்றப்பட்டே ஜல்லிக்கட்டு நடத்தப்படுவதாகவும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

தமிழர்களின் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை பாதுகாக்கவே ஜல்லிக்கட்டு நடத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ள தமிழக அரசு, நாட்டு மாட்டு இனங்களை பாதுகாக்கவும் நடத்தப்படுவதாக தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டின் கலாச்சாரத்தோடு ஜல்லிக்கட்டு இணைந்திருப்பதால் ஜல்லிக்கட்டுக்கு மிருகவதை சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவும் தமிழக அரசு எழுத்துபூர்வ வாதத்தில் கூறியுள்ளது. (ஐ)

# இனப் பிரச்னைக்கு தீர்வு காண ஜனவரி முதல் பல கட்ட பேச்சுகள்!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



**கொழும்பு, டிசெ. 19**

**இனப் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு காண்பது குறித்து வரும் ஜனவரி முதல் பல கட்டப் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தயாராகியுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பேச்சு விடயத்தில் அர்ப்பணிப்புடனேயே செயல்பட்டு வருகின்றது என்று தெரிவித்த அவர், அனைத்து இனக்குழுமங்களின் அரசியல் தரப்புக்களிலும் 'பிச்சைக்காரன் புண் போன்று' இந்த விடயம் நீடிக்க வேண்டும் எனக் கருதும் வன்போக்கு நிலைப்பாடுகளை உடையவர்கள் உள்ளார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

சர்வகட்சி மாநாட்டின் எதிர்கால செயல்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனங்களுக்கிடையிலான தேசிய இனப்பிரச்னை தொடர்பில் நீண்டகாலமான கரிசனை கொண்டவராக இருக்கின்றார். இந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கம் அவருக்கு பல தசாப்தங்களாகவே இருந்து வருகின்றது.

இவ்வாறான நிலையில், தற்போது சர்வகட்சிகளின் பங்கேற்புடன், பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பேச்சுகளை எதிர்மறையாகப் பார்ப்பவர்களும் உள்ளார்கள். குறிப்பாக, ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தேடுவதற்கான முன்னெடுக்கப்படுவதாகவும் கூறுகின்றார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் செயல்படாகவும் பிரசாரம் செய்யப்படுகின்றது.

உண்மையிலேயே சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களுக்கும் இனப்பிரச்னை உள்ளிட்ட இதர பிரச்சினைகள் குறித்த பேச்சுக்களுக்கும் எவ்விதமான தொடர்புகளும் இல்லை. நாணய நிதியத்துடனான பேச்சுக்கள் தொடர்பாக பிரத்தியோகமான சந்திப்புக்களும் பேச்சுக்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்தப் பேச்சுக்கும் இனப் பிரச்னைக்கான தீர்வு குறித்த பேச்சுக்களுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. தமிழ், முஸ்லிம், சிங்கள, மலையக தரப்புக்களில் இனப்பிரச்னை யாது தீர்க்கப்பட்டு விடாது 'பிரச்சைக்காரன் புண்' போல நீண்டுகொண்டிருக்க வேண்டும் என்று கருதுகின்ற தரப்பினர் இருக்கின்றார்கள். இது துரதிர்ஷ்டவசமானது. அத்துடன், அவர்களை வெற்றிகொள்வதும் சவால்கள் நிறைந்தது. ஆனால், அவ்விதமான விடயங்களை எல்லாம் கடந்து தான் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அதற்கு தயாராகவே உள்ளது.

குறிப்பாக, வரும் ஜனவரி மாதம் முதல் இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பல்வேறு கட்டப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதில் எவ்விதமான தயகத்தையும் அரசாங்கத் தரப்பு காண்பிக்கப் போவதில்லை. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபித்தல், கைதிகளின் விடுதலை உள்ளிட்டவற்றுக்கான அடிப்படைச் செயல்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு விட்டன. காணமாலாக்கப்பட்டவர்களின் உறவிர்கள் பற்றியும் கவனத்தில் கொண்டு இழப்பீடு உள்ளிட்ட நடவடிக்கைகளை வழங்குவதற்கு தயராகவே உள்ளோம் - என்றார்.



# தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் வெறும் வாய்ச்சொல் வீரர்களே!

## தமிழ்த் தேசிய பசுமை கட்சி தலைவர்

*யாழ்ப்பாணம், டிசெ. 19*

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப் பட்டதற்குப் பிறகு நமது அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் தங்களைத் தமிழ்த் தேசியப் போராளிகளாக வெளிக்காட்டி வருகின்றனர். அவர்கள் வாய்ச்சொல் வீரர்களாக இருக்கும்போது, எமது விவசாயிகள் செயல்வீரர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இராசதானியத் திட்டத்தின்கீழ் விதைகளைப் பெற்ற விவசாயிகளிடமிருந்து அறுவடையின் பின்னர் விதைகளை மீளப்பெறும் நிகழ்ச்சி சனிக்கிழமை அளவெட்டியில் நடைபெற்றது. இங்கு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதாரநெருக்கடியால் இலங்கையிலுள்ள விவசாயிகள் அனைவரும் பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றனர். பசளைகள் இல்லாததாலும், எரிபொருள் இல்லாததாலும் எந்தவொரு விவசாயியாலும் உரிய அறுவடையைப் பெற முடியவில்லை. ஆனால், வடக்கு, கிழக்கு விவசாயிகள் ஏற்கனவே போரால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் தற்போது இரட்டிப்பு மடங்காகப் பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

போர் நெருக்கடிகளின் போதும் எமது விவசாயிகள் மண்ணைவிட்டு இடம்பெயரவில்லை. அறுவடை பொய்த்த போதும் விவசாயத்தைவிட்டு விலகவில்லை. அடுத்தமுறையாவது அறுவடை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வயலில் கண்ணீரோடும் வியர்வையோடும் இன்றளவும் உழுது கொண்டுதான் இருக்கிறார்கள்.

எமது மக்களின் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகியிருக்கும் இன்றையநிலையில் விளைநிலங்களில் நாளாந்தம் போராடும் எங்களின் விவசாயிகளை விடவா வேறு தமிழ்த் தேசியப் போராளிகள் இருக்கப் போகிறார்கள்? என்றும் கூறினார். (ஐ)

# யாழ். ஆயர் ஜஸ்டினுடன் தூதுக் குழுவினர் சந்திப்பு!

*யாழ்ப்பாணம், டிசெ. 19*

யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாட்டுக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்ட தூதுவர் குழுவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இந்த சந்திப்பு இடம்பெற்றது. பிரான்ஸ், பஹ்ரைன், வியட்நாம், ஜேர்மனி, லெபனான், இஸ்ரேல், எதியோப்பியா, பிலிப்பைன்ஸ், ஜோர்தான், அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா ஆகிய 12 நாடுகளுக்கு புதிதாக இலங்கையால் நியமிக்கப்பட்ட தூதுவர் குழுவே இந்த சந்திப்பில் ஈடுபட்டது.

இதன்போது வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். வட மாகாணத்துக்கு வந்துள்ள தூதுவர் குழு பல்வேறு சந்திப்புக்களில் ஈடுபட்டு வருகிறது.

# காணாமலாக்கப்பட்ட மகனை தேடிய இன்னொரு தாயாரும் காலமானார்!

*யாழ்ப்பாணம், டிசெ. 19*

கடந்த 1996ஆம் ஆண்டு புத்தூர் கிழக்கு, ஊரணி பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மகனைத் தேடி போராட்டம் செய்த தாயார் ஒருவர் வெள்ளிக்கிழமை காலமானார்.

புத்தூர் கிழக்கு, ஊரணி பகுதியைச் சேர்ந்த செல்வன் சோதி என்ற தாயாரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் தனது மகன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னர், தனது மகனை மீண்டும் தன்னிடம் மீட்டுத் தருமாறு கோரி பல போராட்டங்களில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இருப்பினும், அவருக்கு இறுதிவரை அவரது மகனை பார்க்கும் சந்தர்ப்பமோ அல்லது அவர் தொடர்பான வேறு தகவல்களோ கிடைக்கவில்லை.

தமது பிள்ளைகளை தேடி போராட்டங்களில் ஈடுபட்ட பல பெற்றோர்கள் உயிரிழந்த நிலையில் அவர்களின் பிள்ளைகளை காண்பது என்பது அவர்களுக்கு கடைசிவரை கனவாகவே அமைந்திருந்தது என்பது மக்கள் மத்தியில் மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# சிங்கள மக்களின் மனமாற்றம் இனப் பிரச்னை தீர்வுக்கு சாதகம்!

## சுமந்திரன் எம். பி. கூறுகிறார்



*காரைதீவு, டிசெ.19*

இன்று நாட்டில் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு விதமான மன மாற்றம் தென்படுகின்றது. இதனை நாங்கள் சாதகமாக பயன்படுத்தி எமது மக்களின் பிரச்னையை தீர்க்க வேண்டிய காலம் கனிந்து இருக்கின்றது. அரசுடன் பேசாமல் எதுவும் செய்ய முடியாது. அங்கு நமது தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வு பற்றி தெளிவாக எடுத்துரைப்போம் என எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை - காரைதீவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்து இருக்கின்றார். நிச்சயம் நாங்கள் அதில் கலந்து கொள்கின்றோம். அங்கு தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வு என்ன என்பதை தெளிவாகக் கூறவிருக்கிறோம்.

அதாவது வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் சரித்திரமாக வாழ்ந்து வருகின்ற பிரதேசத்தில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி கட்டமைப்பில் அதி உச்ச அதிகார பகிர்வு தரப்பட வேண்டும்.

இதுவே எமது தெளிவான தீர்க்கமாக முடிவாக இருக்கின்றது. இதனை நாங்கள் ஜாதிபதியிடம் நிச்சயம் தெளிவுபடுத்த இருக்கின்றோம். ரணிலை நம்புவதா நம்பாமல் விடுவதா என்பதெல்லாம் இப்போது பிரச்னை அல்ல.

எமது தீர்வை அங்கு சொல்ல வேண்டும். அதற்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது தான் இப்போது பிரச்னை. கடும் சிங்கள தேசியவாதம் உருவாகின்ற பௌத்த சம்மேளனம் போன்ற அரங்குகளில் நாங்கள் சமஷ்டி பற்றி பேசி இருக்கின்றோம். அவர்கள் அதனை மௌனமாக ஏற்றுக் கொண்டார்கள் .

இன்று மக்கள் தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு ஒரு பாடத்தைக் கற்பித்திருக்கிறார்கள். இதனால், நான் பாராளுமன்றத்தில் இப்போது சமஷ்டி பற்றி பேசுகின்றேன். யாரும் வாய்திறப்பதில்லை. அன்று சமஷ்டி என்றால் கூக்குரலிடுவார்கள்.

ஆனால் இன்று அதனை கூறுகின்றபோது அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ ஒரு மௌனத்தோடு கவனிக்கிறார்கள். அவர்கள் மத்தியிலும் அந்த மாற்றம் தென்படுகின்றது. எனவே, நம்பிக்கையோடு பேச்சை நாங்கள் எதிர்கொள்வோம் - என்றார். (ஐ)



# அளம்பில் துயிலும் இல்லத்தை விடுவிக்க கோரி போராட்டம்!

## ஒரு பகுதியை விடுவிக்க இணக்கம்

முல்லைத்தீவு, டிசெ. 19

**முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள இராணுவத்தினரும், தனியார் ஒருவரும் ஆக்கிரமித்துள்ளனர். இந்தக் காணியை விடுவிக்குமாறு கோரி நேற்று அந்தப் பகுதியில் நூற்றுக் கணக்கான பொதுமக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தினர்.**

இதைத் தொடர்ந்து அந்தக் காணியில் ஒரு பகுதியை விடு விப்பதற்கு இணக்கம் காணப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தலைமையில் இந்தப் போராட்டம் நேற்று துயிலும் இல்லம் அமைந்திருந்த காணியில் நடைபெற்றது என் பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பேராதனை பல்கலைக்கழகத்தில் யாழ். மாணவன் மீது தாக்குதல்!

கண்டி, டிசெ. 19

பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப்பீட முதலாம் வருட மாணவர் ஒருவர் மீது மதுபோதையில் இருந்தார் என்று கூறப்படும் நான்காம் வருட மாணவர் ஒருவர் தாக்கியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மாணவன் சிகிச்சைக்காக பேராதனை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் என்பதுடன், தற்போது நோர்டன் பிரிட்ஜ் பகுதியில் வசிக்கும் அவர், கலைப் பீடத்தில் முதலாம் வருடத்தில் கற்கிறார்.

சம்பவம் தொடர்பில் பேராதனை பொலிஸாரும் பல்கலைக்கழக நிர்வாகமும் தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

விடுதியில் தங்கியிருந்தபோது சிரேஷ்ட மாணவர்கள் மூவர் வந்து தன்னை அச்சுறுத்தினர் என்றும், அதில் ஒருவர் தன்னை கையால் எட்டி உதைத்தார் எனவும் மற்றுமொரு மாணவர் தனக்கு உதவி செய்தார் என்றும் அந்த மாணவன் கூறியுள்ளார். (ஐ)

# போட்டிக்கு ஓடிய பேருந்து விபத்து!

வவுனியா, டிசெ. 19

வவுனியாவில் இரு பேருந்து கள் போட்டிக்கு ஓடியதில் அவற்றில் ஒன்று வீதியை விட்டு கீழிறங்கி விபத்துக்குள்ளானது.

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் சாம்பல்தோட்டம் பிள்ளையார் ஆலயம் அருகே நேற்று காலை இந்த விபத்து இடம்பெற்றது.

வவுனியாவிலிருந்து பூவர சங்குளம் வீதியூடாக செட்டிக் குளம் செல்லும் தனியார் பேருந்தும் வவுனியாவிலிருந்து மன்னார் செல்லும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இரு பேருந்து களும் குறிப்பிட்ட இடத்திலி ருந்து போட்டிக்கு சென்றுள் ளன.

இதன்போது குறித்த தனியார் பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதி யினை விட்டு கீழிறங்கி விபத் துக்குள்ளானது.

விபத்தில் பயணிகளுக்கு எவ்வித காயங்களும் ஏற்பட வில்லை என்பதுடன் இச் சம்ப வம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# இந்தியா செல்ல முயன்ற ஐவர் மன்னாரில் கைது!

மன்னார், டிசெ. 19

சட்டவிரோதமாக கடல் வழியாக இந்தி யாவுக்கு தப்பிச்செல்ல முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தலைமன்னாரில் நேற்று முன்தினம் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர்கள் வவுனியா, திருகோணமலை, பேசாலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்ட ஐவரில் ஆண்கள் மூவரும் பெண்கள் இருவரும் அடங்கு கின்றனர் என்றும் தெரிய வருகின்றது.

தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களை மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். (ஐ)

# தமிழரசு கட்சியின் ஆண்டு விழா கிளிநொச்சியில் நேற்று நடந்தது!





கிளிநொச்சி, டிசெ. 19

இலங்கை தமிழரசு கட்சி யின் 75வது ஆண்டு தொடக்க விழா நேற்று ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.

காலை 9:30 மணிக்கு கிளி நொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலை மையில் ஆரம்பமானது.

நிகழ்வில் முன்னதாக விருந்தினர்களை வரவேற்று கட்சியின் கொடி ஏற்றப்பட் டதை தொடர்ந்து மங்கல விளக்கேற்றலை தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெற்றன.





நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் களான சரவணபவன், சாந்தி சிறீஸ்கந்தராஜா, இலங்கை தமிழரசு கட்சியின் உறுப்பினர் கள் எனப் பலர் கலந்து கொண் டனர். (ஐ)

# தமிழினம் அழிவின் விளிம்பிலிருந்து தப்ப நில ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும்!



## யாழ். பல்கலைக்கழக வேந்தர் பத்மநாதன்

யாழ்ப்பாணம், டிசெ. 19

**தமிழினம் அழிவின் விளிம்பிலிருந்து தப்ப வேண்டும் என்றால் தமிழர் தாயகம் மீதான நில ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்பட வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக வேந்தர் சிவசுப்பிரமணியம் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.**

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசு கட்சியின் 75ஆவது ஆண்டு தொடக்க விழாவில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், காலம் காலமாக தமிழர்கள் மீதான அடக்கு முறைகளும் ஆக்கிரமிப்புக்களும் தொடர்கின்றன. குறிப்பாக முள்ளிவாய்க்கால் யுத்தத்திற்கு பின்னர் தமிழர் தாயகத்தின் மீதான நில ஆக்கிரமிப்புக்கள் வழிபாட்டுத் தலங்களை ஆக்கிரமித்தல் தொல்லியல் அடையாளங்களை ஆக்கிரமித்தல் அதன் அடையாளங்களை மாற்றுதல் என்பன தொடர்ந்த வண்ணம் உள்ளது.

அழிவின் விளிம்பிலிருந்து தமிழ் இனத்தைபாதுகாக்க வேண்டும் அப்படி என்றால் நில ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்பட வேண்டும் குறிப்பாக நிர்வாக அலகுகள் சிங்களமும் தமிழும் ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். (ஐ)

# ஏமாற்றும் ஆணைக்குழுக்களிடம் எமது உறவுகள் அகப்பட வேண்டாம்!

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்

முல்லைத்தீவு, டிசெ. 19

அரசாங்கங்களால் காலத்துக் காலம் அமைக்கப்படுகின்ற விசாரணை ஆணைக்குழுக்கள் அரசாங்க ஆதரவு நபர்களுக்கு வேலை வாய்ப்பையும் அவர்களின் வருமானத்தையும் அதிகரிப்பதற்கும் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கும் அமைக்கப்பட்டுள்ளன. இதற்குள் எமது உறவுகள் அகப்பட வேண்டாம் எனவும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க தலைவர் மரியசுரேஸ் ஈஸ்வரி மற்றும் செயலாளர் பிரபாகரன் ரஞ்சனா ஆகியோர் ஊடக சந்திப்பை நேற்று முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடத்தியிருந்தனர்.

இன்று திங்கட்கிழமையும், நாளை செவ்வாய்க்கிழமையும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் காணாமல் போனோருக்கான அலுவலகத்தால் மக்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேலும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் தொடர்பிலும் இதன்போது அவர்கள் கடும் விமர்சனங்களையும் முன்வைத்தனர்.

# பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டு பெண் ஒருவர் கடத்தப்பட்டார்!

கொழும்பு, டிசெ. 19

கம்பஹா - வத்துபிட்டிவலை பிரதேசத்தில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணி புரியும் பெண் ஒருவர் கடத்தப்பட்டுள்ளானர் என்று நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

34 வயதான ஒரு பிள்ளையின் தாயான இவர் நேற்றுமுன்தினம் மாலை வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, அவர் பயணித்த பஸ் நிறுத்தப்பட்டு கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இவரை கடத்திச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட காரின் இலக்கத் தகடு போலியானது என்றும் கடத்தப்பட்ட பெண்ணின் கைபேசியும் செயலிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# புதிய தொழில் சட்டத்தை உருவாக்க தொழில்சங்கங்களுக்கு அழைப்பு!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார விடுத்தார்

கொழும்பு, டிசெ. 19

முதலீட்டாளர்கள், தொழிலாளர்கள் இலகுவான முறையில் சட்டத்தை அறிந்து கொள்ளவும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறைமையை உருவாக்க தொழிற்சங்கங்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிலாளர் ஆலோசனை சபை கூட்டம் நேற்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் கூடியது.

ஆலோசனை சபை கூட்டத்தில் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர், தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள், முதலாளிமார்களின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

நாட்டின் தொழில்துறை அபிவிருத்தி தொடர்பாக பல தரப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்ட போதிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் ஆலோசனை சபையின் உறுப்பினருமான பாரத் அருள்சாமி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு தொடர்பான யோசனை முன்வைத்த போது முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொழிற்சங்கங்களுக்கும்



இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

இதன் போது கருத்து தெரிவித்த பாரத் அருள்சாமி,

நீதிமன்றத்தின் பிரகாரம் தொழிலாளர்களுக்கு சார்பாக சம்பள நிர்ணய சபையின் தீர்மானத்தை முன்கொண்டு செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில் பெருந்தோட்ட நிறுவனங்கள் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளின் மூலமாக தொழிலாளர்களின் உழைப்பை பறிப்பது மாத்திரமன்றி அவர்களின் உரிமையையும் நசுக்குகின்றன. பல்வேறுப்பட்ட தொழில் பிணக்குகள் முதலாளிமார் சமேளனத்தால் தொடுக்கப்பட்ட வழக்கைக் காரணம் காட்டி தட்டிக்கழிக்கப்பட்டு வருகின்றன.

தேயிலைத் தொழில்துறையின் வளர்ச்சி அதிகரித்துள்ள நிலையில் தொழிலாளர்களின் வேதனமானது அதே நிலையிலேயே உள்ளது. டொலர் வீக்கத்தின் பயனை கம்பெனிகள் பெற்ற போதிலும் அதில் எந்த விதமான நன்மையும் தொழிலாளர்கள் பெறவும் இல்லை மாறாக அவர்களின் உழைப்பே சுரண்டப்படுகின்றன. - என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் நாட்டிற்கு முதலீடுக்கு வரும் முதலீட்டாளர்களுக்கும் நாட்டில் பணிபுரிய உள்ள தொழிலாளர்களுக்கும் இலகுவான முறையில் சட்டத்தை அறிந்து கொள்ளவும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறைமையை உருவாக்க தொழிற்சங்கங்களுக்கு அழைப்பு விடுத்தார். (ஐ)

# ஜே. வி. பி. கட்சியைத் தவிர ஏனைய கட்சிகளுடன் கூட்டு!

## பொதுஜன பெரமுன கட்சி தயாராம்!

கொழும்பு, டிசெ. 19

2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியை தவிர ஏனைய அரசியல் கட்சிகள் கூட்டணியாக தேர்தலில் போட்டியிட அதிக கவனம் செலுத்தியுள்ளன.

சிறீ லங்கா பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஒன்றிணைந்து பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைக்க தீர்மானித்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் எதிர்காலத்துக்காக கொள்கை அடிப்படையில் ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைவதில் தவறேதும் இல்லை என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். (ஐ)

# உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டது!

கொழும்பு, டிசெ. 19

மாத்தறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரவுன்ஸ் ஹில் பகுதியில் உள்ள கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை மாத்தறை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட சடலத்துக்கு உரியவர் சுமார் 45 வயதான 5 அடி 3 அங்குலம் உயரமுடையவராவார்.

அடையாளம் காண முடியாத நிலையில் அழுகிக் காணப்படும் இந்த சடலம் மாத்தறை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

மாத்தறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தமிழ் தேசிய அரசியலில் கொள்கை - ஒரு பகிரங்க சவால்?

**யதீந்திரா**

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் காலமாகி 16 வருடங்களாகின்றன. கடந்த 14ம் திகதி, அவரது பதினாறாது நினைவுதினம். அதற்கு முதல் நாள்தான், தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் ரணில் விக்கிரசிங்கவின் சர்வகட்சி கூட்டம் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றியமை தொடர்பில் மாறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. நிபந்தனையுடன் பேசியிருக்க வேண்டுமென்று ஒரு கருத்து முன்வைக்கப்படுகின்றது. சமஸ்டியை ஏற்றுக்கொண்டால் மட்டுமே சிங்கள தரப்புடன் பேசவேண்டுமென்று, இன்னொரு கருத்து முன்வைக்கப்படுகின்றது.

மூன்றாம் தரப்பு இல்லாமல் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ளக் கூடாதென்று, இன்னொரு பார்வை முன்வைக்கப்படுகின்றது. இவைகள் எவையுமே தவறான கருத்துக்கள் அல்ல. ஏனெனில் சிங்களவர்களோடு பேசிப், பேசி ஏமாந்துபோனதே தமிழர் வரலாறு. ஆனால் இந்த இடத்தில் எழும் கேள்வி இவற்றையெல்லாம் அழுத்திக்கூற, அடம்பிடிக்க, பேரம்பேச, நம்மிடமுள்ள பலம் என்ன ?

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகள் அமைப்பிற்குமிடையிலான பேச்சுவார்த்தையின் முதல் நாளில், அன்ரன் பாலசிங்கம் கூறுகின்றார். அவரது குரல் மிகவும் கம்பீரமாக ஒலிக்கின்றது. ஆயுதக் களைவு விடயத்தில் சமரசமில்லை.

அது எங்களுடைய மக்களின் அதிகாரமாகும். அது தமிழர்களின் பேரம் பேசும் பலம். அது எங்களுடைய மக்களின் பாதுகாப்பிற்கான கருவி. இதற்கு சிறிலங்கா அரசிலிருந்து எந்தவொரு எதிர்ப்பும் வரவில்லை. ஏனெனில் எதிர்க்க முடியாது. எதிர்த்தால் பேச்சுவார்த்தை இடம்பெறாது. உண்மையில் பாலசிங்கம் பேசவில்லை, பிரபாகரனது இராணுவ ஆற்றல் அவரை அவ்வாறு பேசவைத்தது. தமிழர்கள் உச்ச பலத்தோடிருந்த காலத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையது.

அது இனிமையான நினைவுகளை தரவல்ல கடந்தகாலம். கடந்த காலம் என்னதான் அற்புதமான உணர்வை தந்தாலும் கூட, நிகழ்காலத்தில் அதற்கு எவ்வித பெறுமதியும் இல்லை. எங்கள் தாத்தாவிற்கு ஒரு யானையிருந்ததென்று, கூறுவதைப் போன்ற ஒன்றுதான் இதுவும். யானை தாத்தாவிடம் இருந்திருக்கலாம் ஆனால் நம்மிடம்?

தமிழ் தேசிய அரசியலை நான்கு கட்டங்களாக பிரிக்கலாம். ஒன்று, செல்வநாயகம் காலகட்டம்.

இரண்டு விடுதலை இயக்கங்களின் காலகட்டம். மூன்று, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காலகட்டம். நான்கு சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் காலகட்டம். இந்த பின்புலத்தில் நோக்கினால், தமிழர்கள் கொழும்பை நிர்பந்திக்கும் பலத்தோடிருந்த காலமாக, இரண்டு காலகட்டங்களைத்தான் குறிப்பிட முடியும். மேற்படி இரண்டு காலகட்டங்களும் தமிழர்கள் ஆயுத பலத்துடனிருந்த காலகட்டங்களாகும்.

அன்று 36 ஆயுத இயக்கங்கள் இருந்ததாக ஒரு பதிவுண்டு. சிலர் இதனை 32 என்றும் பதிவிடுக்கின்றனர். இதனை சிலர் வேடிக்கையாக சொல்வதுண்டு. ஆங்கில எழுத்துக்கள் அனைத்தையும் முன்னுக்கு பின்னாக போட்டுக் கொண்டு உருவாக்கப்பட்ட இயக்கங்கள். ஐந்து இயக்கங்கள் மட்டுமே இதில் பிரதானமாக பேசப்பட்டது. இயக்கங்களின் அன்றைய ஆளணி, சிறிலங்கா இராணுவத்தைவிடவும் மூன்று மடங்கென்று சொல்வார்கள். இந்த இயக்கங்களின் பிரதான இலக்கு என்னவாக இருந்தது? மிதவாதிகளால் அடைய முடியாமல் போன தனி நாட்டை ஆயுத பலம் கொண்டு அடைவதுதான் இவர்களுடைய இலக்காக இருந்தது. இந்த இயக்கங்கள் அனைத்தும் இறுதியில் சிறிலங்காவிற்கு ஒரு பலமான இராணுவத்தைத்தான் உருவாக்கிக் கொடுக்கப் போகின்றன - என்று தங்களுடைய ஆசிரியர் ஒருவர் கூறியதாக ஒரு நண்பர் என்னிடம் கூறினார். இன்று திரும்பிப் பார்த்தால் அப்படித்தான் நடந்திருக்கின்றது.

தமிழர்கள் பலத்துடனிருந்த முதல் காலகட்டமும், இரண்டாவது காலகட்டமும் இயங்கங்களின் காலகட்டம் தான். ஒரு வேறுபாடுண்டு. அதாவது, முதல் கட்டத்தில் இயங்கங்கள் - இரண்டாவது கட்டத்தில் இயக்கம். இயக்கங்களின் முதல் கட்டத்தில் ஒரு இணக்கப்பாடு ஏற்பட்டு, அதன் விளைவாகவே திம்புப் பேச்சுவார்த்தை இடம் பெற்றது. அதன் பெறுபேறாகவே இந்திய-இலங்கை ஒப்பந்தம் இடம் பெற்றது. மாகாண சபை முறைமை ஒரு தீர்வாக முன்வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் இராணுவ பலத்தின் விளைவாகவே, ஒஸ்லோ பேச்சுவார்த்தை இடம்பெற்றது. ஆனால் இந்த பேச்சுவார்த்தையின் விளைவாக எதனையும் அடைய முடியவில்லை மாறாக, தமிழர்களின் ஒட்டுமொத்த பலமும் அழிக்கப்பட்டது.

திம்பு பேச்சுவார்த்தைக்கும், ஒஸ்லோ பேச்சுவார்த்தைக்கும் இடையில் ஒற்றுமையுமுண்டு. அதேவேளை வேற்றுமையுமுண்டு. ஒற்றுமை, இரண்டிலும் மூன்றாம் தரப்பிருந்தது. வேற்றுமை, இந்திய தலையீட்டினதும் நோர்வேயின் தலையீட்டினதும் கனதி முற்றிலும் வேறானது. இந்திய தலையீட்டின் போது, இந்தியா, கொழும்பை நிர்பந்திக்கும் சக்தியாக இருந்தது. ஆனால் ஒஸ்லோ பேச்சுவார்த்தையின் போது, நோர்வே ஒரு நிர்பந்திக்கும் சக்தியாக இருக்கவில்லை.

இந்த பின்புலத்திலிருந்துதான் சம்பந்தனின் காலகட்டத்தை நோக்க வேண்டும். 2009இற்கு பின்னர் தமிழ் தேசிய அரசியல் நிலைமை முற்றிலும் மாற்றமடைந்தது. உண்மையில் 2009இற்கு முன்னரான தமிழ் தேசிய அரசியலானது, இராணுவ ஆற்றல் மீதான நம்பிக்கையின் வழியாகவே நோக்கப்பட்டது.

2009இற்கு பின்னர், நிலைமைகள் பழைய மிதவாத அரசியலை நோக்கித் திரும்பியது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு எப்போது சம்பந்தனது தலைமையின் கீழ் வந்ததோ, அப்போதே தமிழ் தேசிய அரசியல் பழைய மிதவாத அரசியலுக்குள் பிரவேசித்துவிட்டது. ஆனால் முன்னரைவிடவும் அது பலவீனமாகவே காட்சியளித்தது.

ஏனெனில் சம்பந்தன் ஒரு தேசிய இயக்கத்திற்கு தலைமைதாங்கக் கூடிய ஆற்றலுள்ள ஒருவர் அல்ல. ஏனெனில் அவரிடம் இயல்பிலேயே மோதும் பண்பில்லை. அப்படியான பண்பு அமிர்தலிங்கத்திடமிருந்ததாக சொல்வார்கள். ஒரு மூத்த தலைவரென்னும் தகுதியை கொண்டே, சம்பந்தன் கூட்டமைப்பை வழநடத்த முற்பட்டார். ஆனால் அதனைக் கூட அவரால் சரிவரச் செய்ய முடியவில்லை. 2009இற்கு முன்னரான தமிழ் தேசியக் கூட்டமைப்பானது, விடுலைப்புலிகளின் தேர்தல் முகமாக மட்டுமேயிருந்தது.

சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து எதை எதிர்பார்க்கலாம்? ஏற்கனவே தோல்வியடைந்த மிதவாதிகளால் புதிதாக எதைச் செய்ய முடியும்? இந்தக் கேள்விகளிலிருந்துதான், 2009இற்கு பின்னரான அரசியலை மதிப்பிட வேண்டும். மிதவாதிகளால் எதனையுமே கையாள முடியாமல் போனதால் தான், ஆயுத இயக்கங்கள் தோற்றம்பெற்றன. இந்திய-இலங்கை ஒப்பந் தத்தை ஆதரித்த அமிர்தலிங்கம், மாகாண சபை தேர்தலில் போட்டியிட மறுத்தார். இந்தப் பின்புலத்தில்தான், விடுதலை இயக்கங்கங்களில் ஒன்றான, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அந்த இடத்தை நிரப்பியது.

அதாவது, மாகாண சபைக்கு வடிவம் கொடுப்பதற்கும் ஒரு இயக்கம் தான் தேவைப்பட்டது. இவ்வாறானதொரு பின் புலத்தில், இன்றுள்ள அரசியல் கட்சிகளால் கொழும்பை நிர்பந்திப்பதற்கு என்ன செய்ய முடியும்?

இந்தக் கேள்வியிலிருந்துதான், நாம், இன்றைய சூழலை மதிப்பிட வேண்டும். விமர்சிக்க வேண்டும். கோபப்பட வேண்டும். குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டும். நடக்க முடியாத ஒருவரைப் பார்த்து ஏன் நீங்கள் நடக்கவில்லை யென்று கேட்கலாமா? இன்றுள்ள சூழலில் பேச்சுவார்த்தையை எவ்வாறு கையாளலாமென்று கூறுகின்றபோது, இந்த அரசியல் யதார்த்தத்தை நாம் மறந்துவிடக் கூடாது.

2009இற்கு பின்னரான சூழலில், கொழும்பை நிர்பந்திக்கும் பலத்தை தமிழர்கள் முற்றிலும் இழந்துவிட்டனர். இந்தச் சூழலில் போரின் இறுதிக் காலத்தில் இடம்பெற்றதாக நம்பப்படும் மனித உரிமை மீறல்களையே ஒரு துருப்புச் சீட்டாக நாம் கையாண்டு வருகின்றோம் ஆனால் அதிலும் ஒரு பிரச்சினையுண்டு.

கடந்த 13வருடங்களாக பொறுப்புகூறல் விடயத்தை கொழும்பு ஏதோவொரு வகையில் இழுத்தடித்தே வருகின்றது. கொழும்பால் இவ்வாறு இழுத்தடிக்க முடிகின்றதென்றால், இங்கு கொழும்பு மட்டும் பிரச்சினையில்லை - மாறாக, அவ்வாறானதொரு வாய்ப்பு சர்வதேச பொறிமுறையில் இருக்கின்றது என்பதையே நாம் உற்றுநோக்க வேண்டும். **(09 ஆம் பக்கம் பார்க்க...)**





**THE THIMPU TALKS: 1985**
**Sinhala-Tamil conflict and the India factor**



Phase I at Thimpu: The two delegations, the Sri Lanka government's and the Tamil, across the table.

திம்பு பேச்சுபாத்தை The failed Thimphu talks

# அரசியலமைப்பு பேரவை நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கவேண்டும்

## தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்துகிறது

அரசியலமைப்பு பேரவையில் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களை சிபாரிசு செய்வதற்கு சிவில் சமூக அமைப்புகளுக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கும் தேசிய சமாதானப் பேரவை நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கக்கூடியதாக அரசியலமைப்பு பேரவை அமையவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது.

இது தொடர்பாக விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் சமாதானப் பேரவை கூறியிருப்பதாவது:

அரசியலமைப்பு பேரவை மீண்டும் அமைக்கப்படுவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் மட்டுமீறிய அதிகாரங்களைக் குவித்த அரசியலமைப்புக்கான 20 வது திருத்தத்தை ரத்துச் செய்து அண்மையில் கொண்டுவரப்பட்ட 21 வது திருத்தத்தின் மிகவும் நலமிக்க அம்சமாகும். அரசியலமைப்பு பேரவை அரசாங்க உறுப்பினர்களையும் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் பக்கச்சார்பற்ற சிவில் சமூக உறுப்பினர்களையும் உள்ளடக்கிய அரசியல் ரீதியில் பக்கச்சார்பற்ற ஒரு அமைப்பாகும்.

அரசும் அதன் நிறுவனங்களும் நாட்டின் நலன்களுக்காக சிறப்பாக செயற்படக்கூடியதாக அவற்றை வலுப்படுத்துவதற்கு அரசியலமைப்பு பேரவை பங்களிப்புச் செய்யும் என்பதே நேர்மறையான எதிர்பார்ப்பாகும்.

ஸ்ரீ லංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

ஆனால், அரசியலமைப்பு பேரவையில் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தப்போகும் உறுப்பினர்களை நியமிப்பதற்கு கடைப்பிடிக்கப்படும் முறை விசனத்தை தருவதாக இருக்கிறது. பேரவையில் உறுப்பினராக இருக்க விரும்புபவர்களிடம் இருந்து தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்கள் கோரப்பட விருப்பதாக அரசாங்கம் விளம்பர அறிவித்தல் கொடுத்திருக்கிறது.

எந்தவொரு அரசியல் கட்சியிலும் உறுப்புரிமையைக் கொண்டிருக்காமல், பொதுவாழ்விலும் துறை சார் வாழ்விலும் தங்களுக்கென்று ஒரு பெயரை ஏற்படுத்திக் கொண்ட நேர்மையும் மேன்மையும் மிக்க நபர்கள் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு விரும்பாமல் இருக்கலாம்.

நியமனங்களைச் செய்வதற்கான ஏற்பாடொன்று இந்த நடைமுறைகளில் சேர்க்கப்படவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. பேரவையில் சிவில் சமூகத்தின் சார்பில் பிரதிநிதிகளாக இருக்கவேண்டியவர்களை சிபாரிசு செய்வதற்கு சிவில் சமூக அமைப்புக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

இலங்கையின் பன்முக சமுதாய பின்புலத்தில், அரசிலமைப்பு பேரவைக்கான சிவில் சமூக பிரதிநிதிகளை தெரிவுசெய்வதில் சகல சமூகங்களையும் உள்வாங்கும் கோட்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கைகள் அமையவேண்டும். அரச அதிகாரிகளின் தீர்மானங்கள் இலங்கைச் சமுதாயத்தின் பல்வகைகையையும் பன்முகத்தன்மையையும் மனதிற்கொண்டதாக இருக்கவேண்டும். இனம்,மதம் ஆகியவற்றை கணக்கில் எடுக்கவேண்டும். இதில் சாதி, பால், மாற்றுத்திறனாளிகள், தொழில் மற்றும் பிராந்தியங்களும் அடங்கும்.

நாடு இன்று சிக்கியுள்ள பொருளாதார மற்றும் அபிவிருத்தி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசியல் தலைமைத்துவங்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஐக்கியம் முக்கியமானது.

அரசையும் தேசத்தையும் கட்டியெழும்பும் பணிகள் தாமதமின்றி முன்னெடுக்கப்படுவதற்கு ஏதுவாக அரசியலமைப்பு பேரவை விரைவில் தெரிவு செய்யப்படவேண்டும் என்று நாம் கோருகிறோம்.

# தமிழ் தேசிய அரசியலில் கொள்கை...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த பின்புலத்தில் நோக்கினால். உள்நாட்டில் பலமில்லை. பிராந்திய சக்தியான இந்தியாவின் நிலைப்பாடு இந்திய - இலங்கை ஒப்பந்தத்துடன் மட்டுப்பட்டிருக்கின்றது. அமெரிக்காவின் கரிசனையோ, மனித உரிமைகள் விவகாரத்தை தாண்டி அசைவதாக இல்லை - அரசியல் தீர்வு தொடர்பில் அவர்கள் இதுவரை உச்சரித்ததில்லை. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அழுத்தங்கள் நமது எதிர்பார்ப்புக்களை சிறியளவில் கூட, பூர்த்திசெய்யவில்லை. இந்த நிலையில் என்ன செய்ய முடியும்? கொழும்பிற்கு நிபந்தனை வைக்கலாம். சமஸ்டியை பகிரங்கமாக அறிவித்தால்தான், நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வருவோமென்று உரத்து பேசலாம் - ஆனால், அதற்காக அவர்களை எவ்வாறு நிர்பந்திப்பது?

இந்த இடத்தில் தமிழர்கள் என்னதான் செய்வது? நாம் எப்போது மீளவும் பலம் பெறுவோம்? எப்போது முன்னைய கம்பீரத்துடன் பேசச் செல்வோம்? எந்த ஆய்வாளரிடம், எந்த புத்திஜீவிடம், எந்த சிவில் சமூகத்திடம் இதற்கு பதிலுண்டு. புலம்பெயர் அமைப்புக்களிடம் பதிலிருக்கின்றதா?

ஒரு மொங்கோலிய கூற்றுண்டு. அதாவது, குதிரை கிடைக்கும் வரையில் கழுதையை ஓட்டுங்கள். இப்போது அந்தக் கழுதை எதுவென்பதில்தானே நமக்குள் விவாதங்கள் இடம்பெறுகின்றன. இப்போது, 13 என்னும் எண்ணை உச்சிரித்தாலே, மகா பாவம் என்பது போல் சிலர் சிலிர்த்துக் கொள்கின்றனர். அனைவரையும் நோக்கி இந்தக் கட்டுரையாளர் ஒரு கேள்வியை முன்வைக்கின்றார். மனச்சாட்சிப்படி பதில் கூறுங்கள். கடந்த 73 வருடகால தமிழ் தேசிய அரசியல் பயணத்தின் போது, நாம் கொள்கை வழியில் மட்டும்தான் பயணித்திருக்கின்றோமா? நாம் கொள்கை தவறியதேயில்லையா? சூழ்நிலைகருதி சிந்தித்ததில்லையா - செயற்பட்டதில்லையா?

சமஸ்டிக் கோரிக்கை முன்வைத்த செல்வநாயகம் எந்த அடிப்படையில் பண்டா-செல்வா, டட்லி-செல்வா உடன்பாடுகளுக்கு சென்றார். தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எந்த அடிப்படையில் மாவட்ட சபைக்கு இறங்கினர்? எந்த தமிழ் தேசிய கொள்கையின் அடிப்படையில், தமிழரசு கட்சி, 1965 இல், டட்லி சேனநாயக்க தலைமையிலான, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்து, அமைச்சரவையிலும் பங்குகொண்டது? ஜம்பதிற்கு ஜம்பது கோரிய ஜி.ஜி. பொன்னம்பலம், டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஜக்கிய தேசியக் கட்சியில் அமைச்சராக இருந்த கதையை மறக்க முடியுமா? இவைகள் அனைத்தும் எந்த தமிழ் தேசிய கொள்கையின் அடிப்படையில் இடம்பெற்றன? இவற்றுக்கு பதில் என்ன? இவற்றுக்கான பதில் தந்திரோபாயமென்றால் - ஏன் இருக்கின்ற ஒரேயொரு துருப்புச் சீட்டான மாகாண சபையை உச்சபட்டசமாக பயன்படுத்திக் கொள்ளக் கூடாது? அது ஏன் ஒரு தந்திரோபாயமாக இருக்க முடியாது? இல்லை! - இது பச்சைத் துரோகமென்றால், முன்னர் இடம்பெற்றவைகளையும் பச்சைத் துரோகமென்று அறிவிக்கும் துணிவுண்டா? இன்று சூழ்நிலை கருதி, தந்திரோபாயமாக சில விடயங்களை முன்னெடுப்பது தவறென்றால், தமிழினத்தின் முதல் துரோகி எஸ்.ஜே.வி. செல்வநாயகமாகத்தானே இருக்க முடியும்? அதற்கு முன்னர் பச்சைத் துரோகமிழைத்தவர் (கஜன் பொன்னம்பலத்தின் பாட்டன்) ஜி.ஜி.பொன்னம்பலமல்லவா?

இயக்கங்களின் வரலாறு என்ன? எந்த இயக்கம் எதிரியென்று கூறப்பட்டவர்களோடு தேவைகருதி ஊடாடாத இயக்கம். இந்திய அமைதிப் படைகளால் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிடுவோமென்னும் சூழலில்தான், அதிலிருந்து, தப்பித்துக் கொள்வதற்காக, விடுதலைப் புலிகள் பிரேமதாசவோடு உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டனர். 2000இல், அன்ரன் பாலசிங்கம், இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில் இதனை பச்சையாக போட்டுடைத்திருந்தார். இந்திய அமைதிப்படை வடக்கு கிழக்கு முழுவதையும் கட்டுப்பாட்டுக் கொண்டுவந்திருந்தது. இந்த நிலையில், முழுமையான அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில்தான், பிரேமதாசவோடு புரித்துணர்வு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. பின்னர் இந்தியாவின் தேவையை உணர்ந்து, பாலசிங்கம் இந்தியாவை நோக்கித் திரும்பினார்.

(When we entered into negotiations with President Premadasa, we were on the brink of destruction. The IPKF had taken over the entire north and east and the LTTE and Prabhakaran were fighting for survival. So we entered into an understanding with Premadasa to escape from total annihilation.)

ஒரு வீழ்சியை எதிர்கொள்ளும் போது, தந்திரேபாயமாக செயற்பட முடியும் - அந்த தந்திரேபாயத்திற்காக எந்தவொரு எல்லைக்கும் செல்லலாமென்பதுதானே இதன் பொருள்! இதில் எங்கிருக்கின்றது கொள்கை? எனவே தந்திரேபாயத்தை கொள்கையோடு இணைத்து குழம்பிக்கொள்ள வேண்டியதில்லை என்பதுதானே விடயம். இந்த பின்புலத்தில் சிந்தித்தால், கடந்த 73 வருடகால தமிழ் தேசிய அரசியலில் கொள்கை வழியை மட்டுமே முன்னிறுத்தி சிந்தித்த - கட்சிகளும் இல்லை, இயங்கங்களும் இல்லை.

> தமிழர்கள் பலத்துடனிருந்த முதல் காலகட்டமும், இரண்டாவது காலகட்டமும் இயங்கங்களின் காலகட்டம் தான். ஒரு வேறுபாடுண்டு. அதாவது, முதல் கட்டத்தில் இயங்கங்கள் – இரண்டாவது கட்டத்தில் இயக்கம். இயக்கங்களின் முதல் கட்டத்தில் ஒரு இணக்கப்பாடு ஏற்பட்டு, அதன் விளைவாகவே திம்புப் பேச்சுவார்த்தை இடம் பெற்றது. அதன் பெறுபேறாகவே இந்திய–இலங்கை ஒப்பந்தம் இடம் பெற்றது. மாகாண சபை முறைமை ஒரு தீர்வாக முன்வைக்கப்பட்டது.

சூழ்நிலை கருதிய முடிவுகளுக்கு எவருமே தங்கவில்லையென்பதுதான் வரலாறு. இப்போது புதிதாக தமிழ்-தேசிய வகுப்பெடுப்போர், இந்த அடிப்படையில் விவாதிப்பதற்கு தயாராக இருக்கின்றீர்களா? விவாதிப்போமா? இந்தக் கட்டுரை துணிவுள்ளவர்களை அழைக்கின்றது.

நாம் ஒவ்வொரு விடயங்களை உச்சரிக்கின்ற போதும், நாம் - நமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய அரிவரிக் கேள்வி - நாம் கூறும் விடயத்தை எவ்வாறு அடையப் போகின்றோம்? அதற்கான பலத்தை எவ்வாறு திரட்டிக்கொள்ளப் போகின்றோம்? அதனை எங்களால் திரட்டிக்கொள்ள முடியுமா? விடுதலைப் புலிகள் இராணுவநிலையில் பலமாக இருந்த காலத்தில் கூட, நிலைமைகள் பாரதூரமாவதை உணர்ந்த பாலசிங்கம், இந்தியாவை நோக்கித் திரும்பினார்.

உண்மையில் பாலசிங்கத்தை இன்று நினைவு கூறுவோர் எவருமே - அவரது இறுதிக்கால நகர்வுகள் தொடர்பில் பேசுவதில்லை. பலத்தோடு இருந்த காலத்திலேயே ஒரு கட்டத்திற்குமேல் எதனையும் முன்னெடுக்க முடியவில்லை. பேச்சுவார்த்தையிலிருந்து பிரபாகரன் வெளியேறிய பின்னர், நிலைமைகள் மிகவும் வேகமாக அவருக்கு எதிராகத் திரும்பியது. ஒரு கட்டத்தில் அனைத்துமே கைமீறியது. விடுதலைப் புலிகள் பலத்தோடு இருக்கின்ற காலத்திலேயே எதிர்கொள்ள முடியாத விடயங்களை, இன்று எந்தவிதமான பலமுமில்லாத சூழலில் எவ்வாறு நம்மால் முன்னெடுக்க முடியும்?

அதற்காக இந்தக் கட்டுரை இலக்கை கைவிடுமாறு வாதிடவில்லை. மாறாக, இருப்பதை பாதுகாத்துக் கொண்டு. எடுப்பதை எடுத்துக் கொண்டு, முன்னேறுவோமென்றே வாதிடுகின்றது. நம் கனவுகளை சேமித்துவைப்போம். மீண்டும் பலம்பெறும் காலமொன்று வரும்போது, அந்தச் சேமிப்பை கவனமாகப் பயன்படுத்துவோம். வரலாறு முழுவதிலும் - இவ்வாறுதான் வீழ்ந்த சமூகங்கள், எழுந்திருக்கின்றன.

# மின் கட்டணம் 70 வீத உயர்வு; ஜனவரி முதல் நடைமுறைக்கு!

கொழும்பு, டிசெ. 19

ஜனவரி முதலாம் திகதி முதல் மின்சார கட்டணத்தை 70 சதவீதமாக அதிகரிக்க மின்சார சபை அவதானம் செலுத்தியுள்ளது.

மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிராக நிச்சயம் நீதிமன்றத்தை நாடுவோம் என நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. வரி அதிகரிப்பால் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு வரி அதிகரிப்பை தவிர மாற்று திட்டம் ஏதும் கிடையாது என குறிப்பிடும் அரசாங்கம் அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சிப்பது எந்த விதத்தில் நியாயமானது. 38 இராஜாங்க அமைச்சுக்களுக்கான செலவை குறைத்துப் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க அரச தலைவர்களுக்கு மன மில்லை.



கடந்த ஓகஸ்ட் மாதம் அதிகரிக்கப்பட்ட மின்சார கட்டண அதிகரிப்பால் நடுத்தர மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். தற்போதைய மின்சார கட்டண அதிகரிப்பை தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மின்கட்டணத்தை 70 சதவீதமாக அதிகரிக்கும் பரிந்துரையை இலங்கை மின்சார சபை இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கவுள்ளது.

தற்போதைய மின்கட்டண திருத்தத்திற்கமைய 30 அலகுக்கு குறைவான மின்சாரத்தை பாவிக்கும் நுகர்வோரிடமிருந்து அறவிடப்படும் 360 ரூபாய் குறைந்தபட்ச மின் கட்டணத்தை 3 ஆயிரம் ரூபாவாகவும், 60 அலகுக்கு குறைவான மின்சாரத்தை பாவிக்கும் நுகர்வோரிடமிருந்து அறவிடப்படும் 780 ரூபாய் குறைந்தபட்ச கட்டணத்தை 5000 ரூபாவாகவும், 90 அலகுக்கு குறைவான மின் அலகுக்கு அறவிடப்படும் 1800 ரூபாவை 7000 ரூபாயாகவும், மத தலங்களிடமிருந்து அறவிடப்படும் 1280 ரூபாவை 5300 ரூபாயாகவும் அதிகரிக்க பரிந்துரைக்கப்படவுள்ளது. (ஐ)

# போதை விருந்தில் ஈடுபட்ட 30 இளைஞர்கள் கைதாகினர்!

கொழும்பு, டிசெ. 19

உல்லாச விடுதி ஒன்றில் ஐஸ் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட 30 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெந்தோட்டை - போதிமலுவ பிரதேசத்தில் உள்ள உல்லாச விடுதியில் சிலர் போதைப்பொருள் பாவனையுடன் விருந்துபசாரம் ஒன்றை நடத்துகின்றனர் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் 21 முதல் 27 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் வத்தளை, கொழும்பின் புதுக்கடை, நாரஹேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, மாளிகாவத்தை, மட்டக்குளி, வலஸ்முல்ல உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. (ஐ)

# ஜனநாயக அரசியல் பணிக்கு போராளிகளை வரவேற்கிறேன்

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19

இனத்துக்காக ஆயுதப் போராட்டத்தில் பயணித்த போராளிகள் ஜனநாயக அரசியல் செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு கைகோத்ததை வரவேற்கிறேன் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக போராளிகள் கட்சி தனது முதலாவது தேசிய மாநாட்டை நடத்தியதை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் ஜனநாயக வழியில் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுக்க ஜனநாயக போராளிகள் கட்சி தயாராகியுள்ளது.

நாங்கள் ஆயுதம் ஏந்தா விட்டாலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்தே பயணித்தோம். அக் காலப்பகுதியில் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்பில் பல்வேறு பட்ட பேச்சு இடம்பெற்ற நிலையில் காத்திரமான விடயங்கள் இடம்பெறவில்லை. பேச்சுகள் தோல்வியில் முடிய சிங்கள பேரினவாத அரசு தமிழர் மீது கொடிய யுத்தத்தை மேற்கொண்ட நிலையில் பல அப்பாவி உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.

இவ்வாறான நிலையில் விடுதலைப் போராட்டம் ஜனநாயகப் போராட்டமாக உருவெடுத்து தேர்தல் அரசியல் மூலம் எமது மக்களின் பிரச்னைகளை சர்வதேசம் முன் எடுத்துச் சென்றோம்.

எமது மக்களின் அரசியல் தீர்வு விடையங்களில் ஜனநாயக போராளிகள் கட்சியும் இணைந்து பயணிக்க முன்வந்துள்ளமை வரவேற்கிறேன் - என்றார். (அ)

கல்வி tv CHANNEL-1

19.12.2022
திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

19.12.2022
திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஆறுமுக நாவலரின் குருபூஜை காரைதீவில் சிறப்பாக நடந்தது!



காரைதீவு, டிசெ. 19

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 200ஆவது அகவை நிறைவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடத்தும் ஆறுமுக நாவலர் குருபூஜை நேற்று ஞாயிற்றுக்கிழமை காரைதீவில் சிறப்பாக நடைபெற்றது.

சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் இந்நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது.

திருமுன்னிலை அதிதியாக சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் (ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயம் காரைதீவு ) கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார். பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்துகொண்டு உரையாற்றி சிறப்பித்தார்.

காலையில் கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து ஆறுமுக நாவலரின் அழகிய ரத ஊர்வலம் ஆரம்பமாகியது. முன்னதாக கண்ணகை அம்மன் ஆலயத்தில் நாவலரின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு திருமுன்னிலை அதிதி சிவசிறி சண்முக மகேஸ்வர குருக்களால் பஞ்சாரத்தி காட்டி ஊர்வலம் ஆரம்பமானது.

நந்திக் கொடிகள் சகிதம் அறநெறி மாணவர்கள் முன்னே வர பின்னால் அதிதிகள் மற்றும் ஆறுமுக நாவலரின் தேர் ஊர்வலம் வந்தது. (ஐ)

# எமது மக்களின் வாழ்வை உயர்த்த தற்சார்பு பொருளாதாரமே ஒரேவழி!

## கலையரசன் எம். பி. தெரிவிப்பு

அக்கரைப்பற்று, டிசெ. 19

நாட்டில் ஓர் அரசாங்கத்தை உருவாக்கி விவசாயத்தில் கை வைத்தது மாத்திரமன்றி, ஒட்டுமொத்த மக்களின் பொருளாதாரத்தையும் இல்லாமல் செய்த பணியை அவர்களே ஆரம்பித்தனர்.

எனவே, எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தற்சார்பு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் தெரிவித்துள்ளார்.

'எமக்கான உணவை நாமே பயிரிடுவோம் வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவோம்' செயல் திட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கனடா கிளையினது அனுசரணையில் ஆலையடிவேம்பில் 100 குடும்பங்களுக்கு மரக்கறி பயிர்கள் வழங்கி வைக்கப்பட்டன.



மக்களின் தேவைகளை அறிந்தவர்களாக இருந்தாலும், எங்களிடம் போதிய நிதி இல்லை. அரசாங்கத்தால் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்படும் நிதிகூட 2022 ஆம் ஆண்டு ஒதுக்கப்படவில்லை. இருந்தபோதும் புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்புடன் சின்னச் சின்ன உதவித்திட்டங்களை மக்களுக்கு வழங்கி வருகிறோம்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சிக்கல் மற்றும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டில் ஒட்டுமொத்தமாக பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதை நிவர்த்தி செய்ய வேண்டும்.

புலம்பெயர் தேசத்திலுள்ள எமது உறவுகளின், மக்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த உதவிகளை செய்துள்ளனர்.

எனவே, முடிந்தவரை இதனை ஒரு வெற்றிகரமான செயற்றிட்டமாக மாற்றியமைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# மழைக்கு மத்தியிலும் அம்பாறையில் புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்றது!

கல்முனை, டிசெ. 19

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நேற்று நாடு முழுவதும் நடைபெற்றது. அம்பாறை மாவட்டத்தில் கடும் மழைக்கு மத்தியிலும் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றினர்.

நேற்று காலை ஆரம்பமான பரீட்சைக்கு மாணவர்கள் பலரும் ஆர்வத்துடன், பங்கேற்றனர். மேலும் பரீட்சை இடம்பெற்ற நிலையங்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இம்முறை 3 இலட்சத்து 34



ஆயிரத்து 698 பேர் நாடு முழுவதும் பரீட்சைக்கு தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-01)

# புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர் சிகிச்சை பெறுவதற்காக உதவி!



திருகோணமலை, டிசெ. 19

சுவிட்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தால் திருகோணமலை புளியங்குளம் பிரதேசத்திலுள்ள வறிய நிலையிலுள்ள புற்றுநோயாளி ஒருவருக்கு நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி சரவணபவ ஆனந்தம் திருச்செந்தூரன் தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை புளியங்குளம் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் இப்பெண் உதவிகள் எதுவுமின்றி சிகிச்சை பெறுவதில் பல்வேறு இடர்பளை எதிர்நோக்கி வந்திருந்த நிலையில் புளியங்குளம் பிரதேச அறப்பணியாளர் ஊடாக ஆதிபராசக்தி அறப்பணி மையத்திற்கு இப்பெண் உதவி கோரியிருந்தார்.

இதையடுத்து இந்த உதவியை, திருகோணமலை மாவட்ட ஆதிபராசக்தி அறப்பணி மையத்தின் பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி சரவணபவ ஆனந்தம் திருச்செந்தூரன் குடும்பத்தினரின் தனிப்பட்ட நிதியில் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், ஆதிபராசக்தி அறப்பணி மையத்தின் அறப்பணியாளர்கள், புளியங்குளம் பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-04)

# போதைப் பொருள் கொடுத்து மாணவி பாலியல் துஷ்பிரயோகம்!

மட்டக்களப்பு, டிசெ. 19

மட்டக்களப்பில் பாடசாலை மாணவியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.பாடசாலை மாணவிக்கு போதைப்பொருளை வழங்கி, துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மாணவியின் காதலன் என குறிப்பிடும் ஒருவரும், அவரின் நண்பருமே இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப் பட்டுள்ளனர். (ஐ)

# விபத்தில் மாணவர் உயிரிழப்பு

பொத்துவில், டிசெ. 19

அம்பாறை - பொத்துவி லில் இடம்பெற்ற மோட் டார் சைக்கிள் விபத்தில் சிக்கி 16 வயது மாணவர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த விபத்து தொடர்பாக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பொத்துவில் ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டு உற வினர்களிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அம்பாறை மாணவர்களுக்கு பயிற்சி புத்தகங்கள் அன்பளிப்பு

கல்முனை, டிசெ. 19

வட, கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் ஊடாக கல்வி மற்றும் வாழ்வாதார உதவி திட்டங்கள் அம்பாறையின் கல்முனை, திருக்கோவில் பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான தவராசா கலையரசன், எம்.ஏ.சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து, காரைதீவு பகுதியிலும் மக்கள் சந்திப்பும் நடைபெற்றது. இதன் போது மக்கள் பலரும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தமது கேள்விகளை முன்வைத்திருந்தனர். (ஐ-01)



# சீனாவில் கொரோனா பலி அதிகரிப்பு! இறுதிச்சடங்கு செய்வதில் நெருக்கடி!!

## - 10 இலட்சம் பேர் இறக்கக்கூடும் என்றும் எச்சரிக்கை -



பீஜிங், டிசெ. 19

சீனாவில் கொரோனா தொற்றால் 10 இலட்சம் பேர் பலியாகக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இதனி டையே, சீனத் தலைநகரில் தொற்றால் உயிரி ழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ச் சியாக அதிகரித்து வருகிறது. இதனால், சடலங்களை அடக்கம் செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் கூறப்படு கின்றது.

கடந்த 2019ஆம் ஆண்டு இறுதி யில் சீனாவின் வுஹான் நகரில் கொரோன வைரஸ் முதன்முதலாக பரவ ஆரம் பித்தது. உலகம் முழுவதும் பரவிய இந்த வைரஸால் பல இலட்சம் பேர் உயிரி ழந்தனர்.

கொரோனா தொற்றை கட்டுக்குள் சீனா கொண்டுவந்திருந்த நிலையில், தற்போது அங்கு கொரோனா வைரஸின் ஒமைக்ரோன் திரிபு பரவி வருகிறது.

இதையடுத்து, கடந்த நவம்பர் முதல் கொரோனா பெருந்தொற்றை தடுக்க சீன அரசு பொது முடக்கம், போக்குவரத்து கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத் தியது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக் கைகளுக்கு எதிராகப் பொதுமக்கள் போராட்டம் நடத்தியதால் கெடு பிடிகளை அரசு தளர்த்தியுள்ளது. இந்நிலையில், தலைநகர் பீஜிங்கில் கொரோனா பரவல் அதிகரித்துள் ளது. 2.2 கோடி மக்கள் வசிக்கும் இந்த நகரில் கொரோனாவால் உயிரிழப் புகளும் அதிகரித்து வருகின்றன.

இதனால் இறுதிச் சடங்கு செய் யும் சேவை நிறுவனங்களுக்கு பணிச்சுமை அதிகரித்துள்ளது. ஊழியர் பற்றாக்குறை யால் சட லங்களை அப்புறப்படுத்துவதிலும், சடலங்களை தகனம் செய் வதிலும் சீன அரசு திணறி வரு கிறது. இந் நிலையில், கொரோ னாவால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அகற்றுவதில் கடைபிடிக்கப்பட்டு வரும் கொள்கைகளில் மாற்றம் செய்ய அரசு முடிவு செய்தது.

சீன செய்தி நிறுவனம் கைக்ஸின் வெளியிட்டுள்ள தகவல்களில் கடந்த வாரம் கொரோனாவால் 2 பத்திரிகை யாளர்களும், 23 வயது மருத்துவக் கல்லூரி மாணவரும் இறந் தார் என்று கூறியுள்ளது. ஆனால், சீன தேசிய சுகாதார ஆணையம், இதுவரை சீனாவில் கொரோனாவால் 5,235 பேர் மட்டுமே இறந்தனர் என்றே கூறியுள் ளது.

இதேநேரத்தில், கொரோனா கட்டுப் பாடுகளை சீனா தளர்த்தியுள்ளதால் 2023இல் 10 இலட்சத்துக்கும் மேல் சீனாவில் உயிரிழப்பு ஏற்படும் என்று அமெரிக்காவைச் சேர்ந்த இன்ஸ்டிடி யூட் ஒவ் ஹெல்த் மெட்ரிக்ஸ் அன்ட் எவால்யூஷன் (ஐ. எச். எம். இ.) நிறுவ னம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# பாடசாலையில் துப்பாக்கி சூடு; இரண்டு மாணவர்கள் மரணம்!

## - அமெரிக்காவில் தொடரும் சோகம் -

நியூயோர்க், டிசெ. 19

அமெரிக்காவில் பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் 2 மாணவர்கள் பலியாகினர்.

அங்குள்ள இல்லினாய்ஸ் - சிகாகோ நகரில் உயர்நிலை பாட சாலையில் நடைபெற்ற கிறிஸமஸ் நிகழ்விலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.



பாடசாலையில் மாணவர்களின் நடனம், இசை உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடந்தன. கொண்டாட்டம் நிறைவடைந்ததும் மாணவர்கள் வீட் டுக்கு செல்வதற்காக பாடசாலையில் இருந்து வெளியேறியபோது வீதியில் முகமூடி அணிந்தவாறு நின்ற நபர் மாணவர்களை துப்பாக்கியால் சுட்டார்.

இதனால், அங்கு பதற்றநிலை ஏற்பட்டது. மாணவர்கள் பாதுகாப்பு தேடி ஓடிய நிலையில், 15, 14 வயது மாணவிகள் இருவர் உயிரிழந்தனர். மேலும், 4 மாணவிகள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்து அங்கு விரைந்த பொலிஸார், அந்தப் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும், தாக்கு தலை நடத்திய சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார் என்று அறிய வருகின்றது.

தப்பிச் சென்றவரை கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத் துள்ளனர்.

(ஐ)

# சீனாவின் பொருளாதார பாதையில் ஆயுத, போதை கடத்தல்கள் உச்சம்!

பாங்கொக், டிசெ. 19

சீனாவின் பொருளாதார பாதை யால் ஆயுதம், போதை பொருள், மனித கடத்தல்கள் மற்றும் சூதாட் டங்கள் அதிகரித்துள்ளன என்று கூறப்படுகின்றது.

சீனாவில் இருந்து மியன்மார் மற்றும் தாய்லாந்து நாட்டை இணைக்கும் 1,700 கிலோ மீற்றர் தொலைவிலான முத்தரப்பு பொரு ளாதார பாதை சாலைகள், புகையிரத நிலையங்கள், துறைமுகங்கள் உள் ளிட்ட உட்கட்டமைப்பு திட்ட பணிகளை உள்ளடக்கியது.

இந்தப் பொருளாதார பாதை யானது மோயி ஆற்றின் குறுக்கே அமைகிறது. வீதித் திட்ட பணிகள் என்ற பெயரில் மெல்ல ஒவ்வொரு நாட்டிலும் தடம் பதிக்கும் சீனா, முதலில் உணவு விடுதிகள், கரோக்கே, சலூன் உள்ளிட்டவற்றை அமைக்கி றது. இப்படி தொடங்கும் அதன் பணியானது இறுதியில் கலாசார மாற்றத்துக்கு வழிவகுக்கும் நிலைக்கு கொண்டு போய் விட்டுவிடுகிறது என்று மெகாங் நியூஸ் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

பிலிப்பைன்ஸ் அல்லது மக்காவ் அல்லது கம்போடியா அல்லது லாவோசில் காணப்படும் சூதாட்டம் போன்று மியன்மார் நாட்டின் மியா வாடியில் ஒன்லைன் வழியேயான சூதாட்டங்களை வளர்ப்பதில் சீனா பங்கு வகிக்கின்றது.

மேலும், மனித கடத்தல்களை தடுக்கிறோம் அல்லது ஆயுதங்கள் அல்லது போதை பொருள் கடத்தல் காரர்களை தடுக்கிறோம் என்று கூறி கொண்டாலும், உண்மையில் அவர் கள் அனைவரும் சர்வதேச அளவில் இயங்க கூடிய கும்பலுடன் நன்றாக தொடர்பில் உள்ளவர்கள் என்று மெகாங் நியூஸ் கூறியுள்ளது.

(ஐ)

# ஈரானின் பிரபல நடிகை கைது; போராட்டத்தை தூண்டினாராம்!

தெஹ்றான், டிசெ. 19



அரசாங்கத்துக்கு எதி ரான ஆர்ப்பாட்டத்தை தூண்டினார் - ஆதரவளித் தார் என்ற குற்றச்சாட்டில் ஈரானின் மிகப் பிரபல மான நடிகையான தர னேஹ் அலிதூஷ்டி கைது செய்யப்பட்டுள்ளார்.

மரண தண்டனைக்கு எதிராக அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்த நிலையில் அவர் ஈரான் படைத் தரப்பால் கைது செய் யப்பட்டுள்ளார். அவர் தனது சமூக வலைத்தளத்தில் ஹியாப் அணியாமல் “பெண்கள், வாழ்க்கை, சுதந்திரம்”, என்று எழுதப்பட்ட பதாகையை ஏந்தியவாறு படத்தை வெளியிட்டார்.

2016 ஆம் ஆண்டு ஒஸ்கார் விருது பெற்றவரான அலி தூஷ்டியின் யாப் அணியாத படம் 10 இலட்சம் விருப்பு களை பெற்றது. இதன்மூலம் அவர் 80 இலட்சத்துக்கும் அதிகமான பின் தொடர்பவர்களை பெற்றிருந்தார். அவ ரின், செல்வாக்குக் காரணமாக அரசுக்கு எதிரான போராட்டத்தில் பலரும் புதி தாக இணைந்தார்கள்.

38 வயதான அலிதூஷ்டி இளம் தலைமுறையிடம் மிகவும் செல்வாக்கு மிக்க நடிகையாக உள்ளார். இவரைப் போன்றே அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவளிக்கும் பிரபலங்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகளை ஒடுக்க அரசு விரும்புகிறது. இந்நிலையிலேயே, அலி தூஷ்டி கைது செய்யப் பட்டுள்ளார்.

அலி தூஷ்டி அரசாங்கத்துக்கு எதி ராக வெளியிட்ட கருத்துக்களை நியா யப்படுத்தும் விதமாக ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறிவிட்டார் என்று அவரைக் கைது செய்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அலி தூஷ்டியின் கைதை நீதித்துறை செய்தி நிறுவனமான மிஷான் உறுதிப்படுத்தியுள்ளது. அவரின் வழக்கு விசாரிக்கப்படுகிறது என்றும் அது கூறியுள்ளது.

ஈரானில் கட்டாய ஹிஜாப் சட்டத் துக்கு எதிராக பெரும் போராட்டங்கள் வெடித்துள்ளன. பலர் கொல்லப்பட்ட நிலையில், ஏராளமானவர்களை கைது செய்து அரசாங்கம் போராட்டத்தை அடக்க முயற்சி செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பருவநிலை மாற்றம் காரணமாக கொலரா நோய் பரவல் அதிகரிப்பு!

ஜெனிவா, டிசெ. 19

பருவநிலை மாற்றம் எதிரொலியாக 30 நாடுகளில் கொலரா நோய் பரவல் ஏற்பட்டுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலக அளவில் கொலரா பரவ லானது, இதற்கு முந்தின கடந்த 5 ஆண்டுகளில் சராசரியாக 20இற்கும் குறைவான நாடுகளில் உறுதி செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில், நடப்பு 2022ஆம் ஆண்டில் கொலரா நோய் 30 நாடுகளில் பரவியுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில், அந்த அமைப்பின் தொற்று நோய்கள் தொடர்பான குழு தலைவர் பிலிப் பார்போசா கூறுகையில்,

நடப்பு சூழ்நிலையானது முன்னெப் போதும் இல்லாத வகையில் வேறுபட் டுள்ளது. கடந்த ஆண்டுகளில் நாம் பார்க்காத வகையில், கொலரா பரவல் அதிகம் மட்டுமின்றி, அதிக கொடிய தும் ஆகும். தொற்று மற்றும் மரண விகி தங்கள் பல ஆண்டுகளாக பெருமளவில் குறைந்து வந்தது. ஆனால், நடப்பு ஆண் டில் கொலரா தொற்று எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. உலகளவில் கொலரா பரவுவதற்கு, அனைத்து வகை யான காரணிகளும் அதன் பங்கிற்கு ஏற்ப பாதிப்புகளை ஏற்படுத்தி சென்றுள்ளன - என்றார்.

பருவநிலை மாற்றம் எதிரொலியாக சர்வதேச அளவில் இந்த பரவல் அதிக ரித்து காணப்படுகிறது. பெரியளவி லான வெள்ளம், முன்னெப்போதும் இல்லாத வகையிலான பருவமழை மற்றும் தொடர்ச்சியான சூறாவளி புயல்கள் ஆகியவற்றுடன் இந்தத் தொற்றும் அதிகரித்து காணப்படுகிறது.

இதனால், ஹெய்டி, லெபனான், மலாவி மற்றும் சிரியா போன்ற நாடுகள் அதிக எண்ணிக்கையில் பாதிக்கப்பட் டுள்ளன. பாகிஸ்தானில் நடப்பு கோடை கால பெருவெள்ளத்துக்கு பின்பு, 5 இலட்சத்துக்கும் கூடுதலானோர் வயிற் றுப்போக்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வயிற்றுப்போக்கு பாதிப்புகளால் ஏற்பட கூடிய காலரா தொற்றானது ஆண்டுக்கு, 40 லட்சம் பேரை பாதிக் கிறது. இதனால், 21 ஆயிரம் முதல் 1.43 லட்சம் பேர் வரை உலகம் முழுவதும் உயிரிழக்கின்றனர் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

(ஐ)

# யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் இசை வாத்திய கலை நிகழ்வுகள்!






இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்துப் பண்பாட்டு நிதியம் ஆகியன வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய வடக்கு மாகாண இசை, பாரம்பரிய வாத்திய கலைஞர்கள் வழங்கும் கலைநிகழ்வு நேற்று முன்தினம் யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோது...!

# முப்படையினரின் செலவுகளை குறைக்கும் நடைமுறை ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 19

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைக்கு முன்னதாக அரசாங்க செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள இலங்கை அரசாங்கம் முப்படையினரின் பதவிகளை வெற்றிடமாக்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இராணுவத்தினருக்கான செலவினங்களைக் குறைப்பதற்காகவும் நாட்டின் பொருளாதாரத்திற்கு மனித வளத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஓய்வுபெற்ற இராணுவத்தினருக்கு ஏனைய திறன்களுக்காக பயிற்சியளிக்கவும் விருப்ப ஓய்வு வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழிந்திருந்தார்.

இதேநேரம், பாதுகாப்பு அமைச்சும் முப்படைகளில் இருந்து வெளியேறியவர்களுக்கு பொது மன்னிப்புக் காலமொன்றை 15 நவம்பர் முதல் 31 டிசெம்பர் 2022 வரை வழங்கியுள்ளது.

அத்துடன், முப்படைகளின் செயல்பாட்டுடன் தொடர்பில்லாதிருக்கும் நபர்கள் பிரகடனப்படுத்தப்பட்ட பொது மன்னிப்புக் காலத்திற்குள் உரிய அறிவிப்புக்களை செய்யாது விட்டால் அந்தந்த சேவைகளிலிருந்து சட்டப்பூர்வ வெளியேற்றப்படத் தகுதியுடையவர்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில், அதிகாரிகள் மற்றும் ஏனைய தரவரிசைப் படையினர் உட்பட இதுவரை 16, 141 பேர் பொதுமன்னிப்புக்காக விண்ணப்பித்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் ரவி ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 12 அதிகாரிகள் மற்றும் பிற தரவரிசைகளை உடையவர்கள் 96 பேர் வெளிநாட்டில் உள்ளனர். அவர்களில் விண்ணப்பங்களைச் அனுப்பியவர்கள் பற்றிய பரிசீலனைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

விமானப்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் துஷாந்த விஜயசிங்க குறிப்பிடுகையில், 983 விமானப்படையினர் பொதுமன்னிப்புக்காக விண்ணப்பித்துள்ளதுடன், 732 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். கடற்படையால் எத்தனை பேர் விடுவிக்கப்பட்டனர் என்பது வெளிப்படுத்தப்படவில்லை. (ஐ)

# கடற்றொழில் சார் மக்களின் வாழ்க்கை தரம் உயர்த்தப்படும்!

## காலியில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 19

காலி மீன்பிடித் துறைமுகத்தில் அமைந்துள்ள ஐஸ் தொழிற்சாலையின் செயல்பாடுகளை சிறப்பான முறையில் முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் காலி மீன் பிடித் துறைமுகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது கடற்றொழில் சார் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டும் என்பதும் தற்போதைய அரசாங்கத்தின் நோக்குகளில் ஒன்றாக இருப்பதாக அமைச்சர் கூறினார்.

இதேநேரம் தென்னிலங்கையில் அமைந்துள்ள மீன் சந்தைகளை பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடலுணவுகள் அனைத்தும் நியாயமான விலையிலும் சுகாதார முறையிலும் மக்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அதிகாரிகளுக்கு வலியுறுத்தியதுடன், சந்தை வியாபாரிகளுடனும் கலந்துரையாடினார்.

இதேநேரம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டுதலுக்கு அமைவாக, இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தினால் தென்னிலங்கையில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்களின் புனரமைப்பு பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டார். (ஐ)

# கிளிநொச்சியில் சமத்துவ கட்சியின் அரசியல் கருத்தரங்கு நடைபெற்றது



கிளிநொச்சி, டிசெ. 19

சமத்துவ கட்சியின் அமைப்பாளர்களுக்கான அமைப்புக்களுக்கான ஒருங்கிணைப்பும் அரசியல் பாடங்களும் கருதரங்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

கட்சியின் தலைவர் சு. மனோகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் மூத்த நிர்வாக சேவை அதிகாரி செல்வின் இரனியஸ், முன்னாள் விரிவுரையாளரும் அரசியல் சமூக ஆய்வாளருமான சிராஜ், வல்லமை பெண்கள் அமைப்பின் இயக்குநர் ரஜனி இராஜேஸ்வரி, அதிபர் தவநாயகம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தனர். (ஐ)

# யாழ்ப்பாணத்தில் 3 தினங்கள் மார்கழி இசை விழா!

யாழ்ப்பாணம், டிசெ. 19

மார்கழி இசை விழா எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது - என்று யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர் இ. ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ். இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவ தமிழ் பண்பாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் வணிகர் கழகம் இணைந்து நடத்தும் இந்த நிகழ்வு, மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் வணிகர் கழகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே ஜெயசேகரம் இந்தத் தகவல்களை தெரிவித்தார். (ஐ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN news
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

# சிற்றுண்டி வகைகளின் விலைகள் ரூ. 10 குறைந்தது!



கொழும்பு, டிசெ. 19

சிற்றுண்டி வகைகளின் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் அனைத்து சிற்றுண்டிகளின் விலைகளும் 10 ரூபாயால் குறைக்கப்பட்டன என்று என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சில மூலப்பொருட்களின் விலை குறைவடைந்துள்ளமையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், ஒரு இறாத்தல் (450 கிராம்) பாணின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தையில் கோதுமை மாவின் விலை 28 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்க சர்வதேசத்துடன் பேசுவதற்கு நான் தயார்!

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

இலங்கையின் அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் சிறந்த வழிமுறையாக சர்வ கட்சி தலைவர் கூட்டம் காணப்படுகிறது. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களை நெருக்கடி நிலையில் இருந்து மீட்பதற்கு சர்வதேச சமூகத்துடன் பேச்சில் ஈடுப்பட தயாராகவுள்ளேன் என்று சர்வதேச கால நிலை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்துள்ள எரிக் சொல்ஹெய்ம்,

பொருளாதார நெருக்கடி மற்றும் பசுமை நிலை பேறான திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளேன்.

இலங்கைக்கு காற்றாலை மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி



வளங்கள் முன்னேற்றத்திற்காக புதிய முதலீடுகளை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த வாரம் அரசியல் கட்சி தலைவர்களுடன் இடம்பெற்ற சர்வகட்சி தலைவர் கூட்டம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எனக்கு தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் அரசியல் பிரச்சனைக்கு தீர்வு காணும் முக்கிய செயல்பாடாக சர்வ கட்சி தலைவர் கூட்டம் காணப்படுகிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# போதைப் பொருளுக்கு முடிவுகட்ட காத்திரமான நடவடிக்கை அவசியம்!

## இராகிருஷ்ணன் வலியுறுத்து

நுவரெலியா, டிசெ. 19

"நாடு வங்குரோத்து அடைந்துள்ள நிலையில், அதனை பயன்படுத்தி இலங்கையில் சமூக சீரழிவை ஏற்படுத்துவதற்கும் சில நாடுகள் முயற்சிக்கின்றன. எனவே, போதைப் பொருள் கடத்தல், விநியோகம் மற்றும் பாவனையை தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

நுவரெலியா - பொகவந்தலாவை சர்வதேச சாலம் முன்பள்ளி பாடசாலையின் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"போதைப்பொருள் மாபியாக்களின் வலைக்குள் இன்று பாடசாலை மாணவர்களும் சிக்கி, போதைக்கு அடிமையாகி வருவது வேதனையளிக்கின்றது. இதற்கு ஆரம்பத்திலேயே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

தமது பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர் விழிப்பாகவே இருக்க வேண்டும். ஆசிரியர்களும் கல்விக்கு அப்பால், மாணவர்களின் நலன்கள், ஒழுக்கம் பற்றி கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். திருமண வீடு, பிறந்தநாள் கொண்டாட்டம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு பெற்றோர் சகிதம் பிள்ளைகளும் செல்கின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் பிள்ளைகளுக்கு பரீட்சாத்தமாக போதைப்பொருள் வழங்கப்படுகின்றது. பின்னர், நிலைமை மோசமாகின்றது.

எனவே, நிகழ்வுகளுக்கு பிள்ளைகளை அழைத்து செல்லும் பெற்றோர் அவர்கள்மீது கழுகுப்பார்வையை செலுத்தினால் நல்லது. நாட்டில் நாளாந்தம் போதைப்பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன. இதன் பின்னணியில் செயல்படுவது யார்? பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகின்றது. பாதுகாப்பு பலமாக உள்ளது என பாதுகாப்பு தரப்பும் கூறுகின்றது.

அப்படியானால் நாட்டுக்குள் போதைப்பொருள் வருவது எப்படி? இலங்கையானது ஒரு



தீவு. காத்திரமான நடவடிக்கைகளை எடுத்தால் இதற்கு முடிவு கட்டலாம்.

மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் போதைப் பொருட்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே, இலங்கையில் சமூக சீரழிவை ஏற்படுத்துவதற்கு சில நாடுகள் முற்படலாம். அவ்வாறான சூழ்ச்சிகளுக்குள் நாம் சிக்கி விடக்கூடாது." - என்றார். (ஐ)

# மக்கள் போராட்டத்தை சீர்குலைக்கவே தீர்வைக் கையிலெடுத்துள்ளார் ரணில்!

## தமிழர்கள் நம்பாதீர்கள் என்கிறார் குமார் குணரட்ணம்

யாழ்ப்பாணம், டிசெ. 18

2023 ஆண்டு இறுதியில் ராஜபக்ஷ, சஜித் அணி, தமிழ் தரப்பு ஆதரவுடன் ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்கான முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுகிறார். அதற்கான முன்னேற்பாடே தமிழ் மக்கள் பிரச்னையை தீர்க்கப்போவதாக அவர் கூறுகிறாரென தெரிவித்த முன்னிலை சோசலிஷ கட்சியின் பொதுச்செயலாளர் குமார் குணரட்னம், தமிழ்தரப்புகள் இதனை விளங்கி கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015 நல்லாட்சி என கூறிய காலத்தில் தீர்க்கப்படாத பிரச்னைகளை அவசரமாக தீர்ப்பது போன்ற தோற்றம் காட்டப்படுகின்றன. இந்த சந்தர்ப்பத்தை நாம் பாவிப்போமென தமிழ்த் தரப்புக்கள் நம்பக்கூடாது. போராட்டத்தை நம்பவேண்டும். ரணிலின் விளையாட்டுக்கு எடுபடக்கூடாது.

இனவாதத்துக்கு எதிரான



தன்மையை காலிமுகத்திடல் போராட்டத்தில் கண்டோம். ஆனால் தற்போது இன ஒற்றுமையை பிரிக்க முயற்சிக்கின்றனர். போராட்டத்துக்கு இடமளிக்கமாட்டேன் என ராஜபக்ஷவினருக்கு ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியளித்துள்ளார். இராணுவம், பொலிஸ் புலனாய்வுத்துறை என்பன போராட்டத்தை அடக்க முனைப்பு காட்டுகின்றன. பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி போராட்டத்தை அடக்க முயல்கின்றனர். அது தொடர்பாக யாழ்ப்பாண மக்களுக்கு அனுபவம் உண்டு. சிங்கள மக்களுக்கு அது புதிதானதே.

போராட்ட சக்திகளை பிரிக்க பல்வேறுபட்ட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. நடுத்தர வர்க்கத்தை இலக்கு வைத்து தனியார் பல்கலைக்கழகத்தை உருவாக்க முயற்சிக்கிறார்.

வரவு - செலவுத் திட்டம் மூலம் ஒரு இலட்சம் வருமானம் பெறுபவரும் வரிசெலுத்தும் நிலை உள்ளது. அரசமைப்பு மற்றும் பாராளுமன்றம் மூலம் செய்யமுடியாததை போராட்டம் மூலம் செய்யமுடிந்தது.

அதிகநேர மின்வெட்டு, வரி அறவீடு போன்றவற்றால் 2023 ஆம் ஆண்டு போராட்டத்திற்கான வளர்ச்சியாக இருக்கும். நடுத்தர சாதரண மக்கள் பொருளாதார நெருக்கடியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொருளாதார நெருக்கடிக்கு எதிராக மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் கிளர்ந்தெழுவர்.

தேர்தலொன்று நடந்தால் அதனுடன் இணைந்ததாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு புதிய அரசமைப்பு கொண்டுவர வேண்டும். பாராளுமன்ற முறைமை இருக்கட்டும். மக்கள் அதிகாரம் கொண்ட மக்கள் சபை உருவாக்கப்பட வேண்டும். ஜூலை 9 போராட்டத்தில் இதனையே கண்டோம். பிரதேசவாரியாக இவை உருவாக்கப்பட வேண்டும் - என்றார். (அ)

# கடற்படையின் தளபதியாக பிரியந்த பெரேரா நியமனம்!



கொழும்பு, டிசெ. 19

இலங்கை கடற்படையின் 25ஆவது தளபதியாக வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நியமனத்துக்கு முன்னதாக, ஜனாதிபதி விக்ரமசிங்க, ரியர் அட்மிரல் பிரியந்த பெரேராவை வைஸ் அட்மிரல் தரத்துக்கு உயர்த்தினார்.

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா பதவி உயர்வுக்கு முன்னர் கடற்படையின் பிரதானியாக இருந்தார். முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அவர் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா 1987 ஆம் ஆண்டு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது அணியில் கடேற் தர அதிகாரியாக கடற்படையில் சேர்ந்தார்.

இதேவேளை, இலங்கை கடற்படையின் 24வது தளபதி அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன நேற்றுடன் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போதைப்....

யட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த ஆண்டில் இதுவரை - கடந்த வெள்ளிக்கிழமை வரை ஆயிரத்து 441 கிலோ ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நாடளாவிய ரீதியில் 45 ஆயிரத்து 948 சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் தொடர்புடைய 45 ஆயிரத்து 801 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதே போன்று 11 ஆயிரத்து 881 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் 34 ஆயிரத்து 182 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவற்றுடன் தொடர்புடைய 34ஆயிரத்து 62 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 109 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் 10 ஆயிரத்து 576 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 10 ஆயிரத்து 532 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களால் ஒருவகை மருந்து உபயோகிக்கப்படுகிறது. அவ்வாறான ஒரு இலட்சத்து ஆயிரத்து 353 மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதே போன்று வேறு ஒருவகை போதை மாத்திரைகள் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 540 கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த வழக்குகளுடன் தொடர்புடைய 349 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்புக்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். இதற்காக மக்களின் ஒத்துழைப்புக்களும் தொடர்ந்தும் எமக்கு கிடைக்கப் பெறுகின்றன. அதனை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

## இந்திய....

வுக்கு தலைமை தாங்கி உரையாற்றிய போதே அவர் மேறக்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கைக்கு 1948ஆம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரம் வழங்கப்பட்டபோதும் தமிழர்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. அதாவது இலங்கையில் தமிழர்கள் ஆட்சி செய்த நிலங்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை. அது சிங்களவர்களுக்கு கிடைத்துள்ளது.

தமிழ் மக்கள் சுதந்திர தமிழர்களாக இருக்க வேண்டும். இதற்காகவே அன்று 1948ஆம் ஆண்டிலேயே தந்தை செல்வா தனது அகிம்சை வழியிலான போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி சிதைந்து தேசிய பட்டியலில் பாராளுமன்றத்துக்கு சென்று பிரதமராகி ஜனாதிபதியாகி இருக்கின்றார். இந்த நிலையில், பேச்சு மூலம் தமிழர்களின் இனப் பிரச்னையை தீர்ப்பதற்கு அழைத்திருக்கின்றார்.

தமிழ் மக்களுடைய விடுதலையை நேசிக்கின்ற ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வதேச நாடுகளின் குறிப்பாக இந்தியாவின் அனுசரணையுடன் பேச வேண்டும் - என்றார். (ஐ)

## 104 மியன்மார்....

இருந்து சுமார் 3.5 கடல் மைல் தொலைவில் கடல் கொந்தளிப்பின் மத்தியிலும் தத்தளித்த அகதிகளை இலங்கை கடற்படை மீட்டது.

இவர்களை, இலங்கை கடற்படையின் உதாரா மற்றும் 04ஆவது விரைவுத் தாக்குதல் கப்பல்கள் சென்று மீட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட 104 ரொஹிங்கியர்களும் நேற்று காலை கடற்படை முகாமுக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு முதலுதவி வழங்கப்பட்டதுடன் - உணவும் வழங்கப்பட்டன.

இந்நிலையில், கையில் காயமடைந்த சிறுவன் ஒருவன் உட்பட, சில நாட்கள் உணவு அருந்ததால் பாதிக்கப்பட்ட பெண் உட்பட ஐந்து பேர் அவசர சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மீட்கப்பட்ட அகதிகளை ஐ. நா.வின் அகதிகள் ஆணையம் (யு. என். எச். சி. ஆர்.) பிரதிநிதிகள், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ஆகியோர் பார்வையிட்டனர்.

தற்போது, கடற்படை முகாகமில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகளை நீதிமன்றத்தில் முற்படுத்திய பின்னர் நீர்கொழும்பில் உள்ள அகதிகள் முகாமுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 34 இலட்சம்....

என்று அவ்வேளையில் இலங்கை கூறியது. "எந்தவோர் இறையாண்மையுள்ள அரசும் அதன் அரசமைப்புக்கு முரணான மற்றும் உள்நாட்டு சட்ட செயல்முறைகளில் தலையிடும் வெளிப்புற பொறிமுறையை ஏற்க முடியாது" என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மனித உரிமைகள் பேரவை அமர்வில் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்த உதவுவதற்காக, 2023 ஆம் ஆண்டுக்கான ஐ. நாவின் பரிந்துரைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிர்வாக மற்றும் வரவு - செலவு விடயங்களுக்கு பொறுப்பான ஐ. நா பொதுச் சபையின் ஐந்தாவது குழுவில் இந்த வாரம் இது குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த நிலையில், "சம்பந்தப்பட்ட நாட்டினால் நிராகரிக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் வரையறுக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்கப்படுவதை அங்கீகரிக்க முடியாது என்று கூட்டத்தில் இலங்கையின் பிரதிநிதி எதிர்ப்பு தெரிவித்துள்ளார். (ஐ)

## பாதுகாப்பான....

கோரிக்கை விடுத்துள்ளனர்.

"மியன்மாரில் வாழ முடியாமல் மலேசியா நோக்கி தாம் பயணித்தனர் என்றும், தமது பாதுகாப்பான வாழ்க்கைக்கு உதவுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என 104 ரொஹிங்கிய அகதிகள் தஞ்சம் கோரி புறப்பட்ட நிலையில் படகு பழுதடைந்து, வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் தத்தளித்தனர். இவர்களை மீட்ட கடற்படை நேற்று காங்கேசன் துறை துறைமுகத்துக்கு அழைத்து சென்று கடற்படை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரூ. 450 கோடி....

128 கிலோ 327 கிராம் ஐஸ் போதைப் பொருள், 106 கிலோ 474 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் என்பன உள்ளடங்கும்.

கடந்த 14ஆம் திகதி 229 கடல் மைல் (424 கி. மீ) தூரத்தில் வைத்துக் கைப்பற்றப்பட்ட இந்தப் போதைப் பொருட்களையும் சந்தேகநபர்களையும் நேற்று கடற்படை கொழும்புத் துறைமுகத்துக்கு கொண்டு வந்தது.

கைது செய்யப்பட்டவர்கள் 29 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் தென் மாகாணத்தை சேர்ந்தவர்கள் என்றும் அறிய வருகிறது. (ஐ)

## தேர்தல்கள்....

டின் அடிப்படையில் 2023 உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் தேர்தலை நடத்த உத்தரவிடக்கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நீதிமன்றத்தை நாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### பெயர் தெரிவில் இழுபறி:

# அரசமைப்பு பேரவை கூட்டம் தொடர்ந்தும் பின்செல்கிறது!

கொழும்பு, டிசெம்பர் 19

அரசமைப்பு பேரவைக்கு மூன்று சிவில் சமூக செயல்பாட்டாளர்களை நியமிப்பதற்காக நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்மொழியப்பட்ட பெயர்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. இதனால், அரசமைப்பு சபையின் நியமனம் அடுத்த மாதத்துக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்று அறிய வருகிறது.

மூன்று சிவில் சமூக செயல்பாட்டாளர்களை தெரிவு செய்வதற்கு பிரதமர், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

அந்தப் பதவிகளுக்கு தகுதியானவர்களை தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதன்படி, விண்ணப்பித்தவர்களில் கலாநிதி அநுலா விஜேசுந்தர, கலாநிதி பிரதாப் இராமானுஜம், குமார் நடேசன், சுகந்தி கதிர்காமர், கலாநிதி எஸ். தர்மரத்ன ஆகியோரின் பெயர்கள் இந்த இடங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டன. இவர்களில் மூவர் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

ஆனால் சில பெயர்களில் பிரதமருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையே உடன்பாடு ஏற்படாததால், இந்த விவாதம் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக, அரசமைப்பு சபையில் சிறிய கட்சியின் பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட பெயர்கள் தொடர்பிலும் இணக்கப்பாடு எட்டப்படாமையால் இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ - சி)

# எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஆய்வுக் குழுவிடம்

கொழும்பு, டிசெ. 19

அரசாங்கத்தின் முடிவின்படி, உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8,911இல் இருந்து 4,000ஆகக் குறைப்பது தொடர்பாக தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழு தயாரித்துள்ள இறுதி அறிக்கை சிறப்பு ஆய்வுக் குழுவால் பரிசீலனை செய்யப்படவுள்ளது.

உள்ளூராட்சி சபை பிரிவுகளின் எல்லை நிர்ணயத்தை பாதிக்கும் சட்டத்தின் பிரகாரம் இந்த மீளாய்வுக் குழுவை இதற்கு பொறுப்பான அமைச்சர் நியமித்து அதன் மூலம் எல்லை நிர்ணய ஆணைக்குழு வழங்கிய இறுதி அறிக்கையை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

அதற்கான நேரத்தை, தொடர்புபட்ட அமைச்சரே முடிவு செய்ய வேண்டும். அதன் பின்னர், வர்த்தமானியில் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் எல்லை நிர்ணயம் செய்யும் பணிகள் நிறைவடையும்.

தற்போது, எல்லை நிர்ணய ஆணைக்குழு எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி எல்லை நிர்ணய குழுவின் இறுதி அறிக்கையை வழங்குவதாக அறிவித்துள்ளது.

எனினும், பழைய முறையில் தேர்தலை நடத்தப்படும் என்று அறிய வருகிறது. இதனால், உள்ளூராட்சி சபைத் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் என்றும் கூறப்படுகின்றது. (ஐ-சி)

# உள்ளூராட்சி எல்லை நிர்ணயம் கட்சிகளை சந்திக்கிறார் மகிந்த!

கொழும்பு, டிசெ. 19

தேர்தல் பிரிவு எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான சிறப்பு கலந்துரையாடலை டிசெம்பர் 20 ஆம் நாள் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடலின் பின்னர், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடனும் சிறப்பு கலந்துரையாடலுக்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் கருத்துக் கணிப்பு பணிப்பாளர் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இந்த கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. அத்துடன், உள்ளூராட்சி பிரிவுகளின் எல்லை நிர்ணயம் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-சி)

## காணாமலாக்....

வர்களை தேடியும் - அவர்களுக்காக நீதி கோரியும் போராட்டங்கள் இடம்பெற்று வந்தன.

இந்தப் போராட்டங்களில் தமது பிள்ளைகளை பிடி கொடுத்த பெற்றோர்களே அதிகளவில் பங்கேற்று வருகின்றனர். வறுமை - நோய் - வயோதிபம் காரணமாக துன்பப்படும் இவர்கள் தங்கள் உறவுகளை தேடி வரும் நிலையிலேயே உயிரிழந்தும் வருகின்றனர்.

இந்நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோருக்காக நீதி கோரி வவுனியாவில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 2 ஆயிரத்து 130 நாட்கள் நிறைவுகின்றது. இந்த நாட்களில் மட்டும் தமது உறவுகளை தேடிய 126 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பயிரிடப்படாத....

நடவடிக்கை எடுக்கப்படும்.

"தமது சொந்த நிலங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளாமல் உள்ள நிலங்கள் அரசுடைமை ஆக்கப்படும். இவ்வாறு அரசுடைமை ஆக்கப்படும் நிலங்கள் அந்தப் பிரதேசங்களில் உள்ள இளைஞர்களுக்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ள வழங்கப்படும். அடுத்த போகத்தின்போது, குறிப்பிடத்தக்க அளவு நிலம் அரசுடைமையாக்கப்பட்டு இளைஞர்களுக்கு பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படும் - என்று கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோது அவர் தெரிவித்தார். (ஐ)

## பாணின் விலை....

இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. இந்நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாணின் விலை தொடர்பா அவரிடம் கேட்டபோது,

"கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் பாணின் விற்பனை விலை 250 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதனால், அவர்கள் 10 ரூபாய் குறைத்து தற்போது விற்பனை செய்வதாக அறிவித்துள்ளனர். ஆனால், நாங்கள் யாழ். மாவட்டத்தில் பாணின் விலை 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எனவே, 10 ரூபாய் குறைக்க முடியாது. இதனை பொதுமக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu



# பங்களாதேஷுக்கு எதிராக இந்தியா மிகப்பெரிய வெற்றி!

சட்டோகிராம், டிசெ. 19

சட்டோகிராம் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 5ஆம் நாளான நேற்று பங்களாதேஷை 188 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்று முன்னிலை பெற்றுள்ளது.

பங்களாதேஷ் அணி நேற்று காலை தனது இரண்டாவது இனிங்ஸில் போராடி 324 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இந்த டெஸ்டில் துடுப்பாட்டத்தில் முக்கிய கட்டத்தில் 40 ஓட்டங்களை எடுத்ததோடு 8 விக்கெட்களையும் கைப்பற்றி மீளெழுச்சி கண்ட குல்தீப் யாதவ் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

272/6 என்று தொடங்கிய பங்களாதேஷ் அணியின் மீதமுள்ள 4 விக்கெட்களைக் கைப்பற்ற இந்திய அணி 12 ஓவர்கள் எடுத்துக் கொண்டது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான பிரிஸ்பன் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா படுதோல்வி அடைந்ததால், ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் அட்டவணையில் இந்திய அணி, அவுஸ்திரேலியாவுக்கு அடுத்த படியாக 2ஆம் இடத்துக்கு முன்னேறி இறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியா அணி 13 டெஸ்ட்களில் 9 வெற்றி ஒரு தோல்வி, 3 சமநிலைகளுடன் 120 புள்ளிகளுடன் 76.92வீதம் என்று உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் அட்டவணையில் முதலிடம் வகிக்கிறது. இந்திய அணி பங்களாதேஷுக்கு எதிராகப் பெரிய வெற்றி பெற்றதன் மூலம் 13 போட்டிகளில் 7 வெற்றி, 4 தோல்வி, 2 சமநிலை என்று 87 புள்ளிகளுடன் 55.77 வீதம் எடுத்து 2ஆம் இடத்தில் உள்ளது. 3ஆம் இடத்தில் தென்னாபிரிக்கா 54.55வீதத்துடனும், நமது நாடான இலங்கை 4ஆம் இடத்திலும் உள்ளன.

முதல் இனிங்ஸில் 150 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்த பங்களாதேஷுக்கு 513 ஓட்டங்கள் என்பது இமாலய இலக்குதான். ஆனால், அவர்கள் கொஞ்சம் போராடினார்கள். அறிமுக தொடக்க வீரர் ஜகீர் ஹசன் அற்புதமான ஒரு டெஸ்ட் சதத்தை எடுத்தார்.

அக்சர், சிராஜ் போன்றோரின் பந்துகளை சகீப் அல் ஹசன் பௌண்ட்ரிகளுக்கு விரட்டி, தனது வருகையை நிரூபித்தார். 8ஆவது விக்கெட்டுக்காக தைஜுல் இஸ்லாம் (4) உடன் சேர்ந்து சகீப் அல் ஹசன் 37 ஓட்டங்களை விரைவு கதியில் எடுத்தார். இந்த 37 ஓட்டங்கள் கூட்டணியில் அனைத்து ஓட்டங்களும் சகீப் அடித்ததே. பங்களாதேஷ் ரசிகர்களுக்கு வாண வேடிக்கை காட்டி 6 பௌண்ட்ரி 6 சிக்ஸர்களுடன் 108 பந்துகளில் 84 ஓட்டங்கள் என்று விளாசினார்.

ஆனால், குல்தீப் யாதவ் ஒரு பந்தை காற்றில் மிக மெதுவாக வீச, சகீப் அல் ஹசன் மட்டையையெல்லாம் சுற்றி முடித்தவுடன் அவர் கண்ணெதிரிலேயே பந்து விக்கெட்டைத் தாக்கியது. தைஜுல் இஸ்லாமை அக்சர் படேல் வீழ்த்த எபொட் ஹுசைனை குல்தீப் காலி செய்தார். பங்களாதேஷ் 324 ஓட்டங்களுக்குச் சுருண்டது. (ஐ)



# கடும் போராட்டத்தின் மத்தியில் சம்பியனானது ஆர்ஜென்ரீனா!

டோஹா, டிசெ. 19

பார்வையாளர்களை மிரள வைத்த பரபரப்பான இறுதியாட்டத்தில் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது ஆர்ஜென்ரீனா அணி. அந்த அணிக்கு சற்றும் சளைக்காமல் கடும் போராட்டத்தைக் கொடுத்தது பிரான்ஸ் அணி.

ஆர்ஜென்ரீனா அணி கைப்பற்றிய மூன்றாவது உலகக் கிண்ணம் இதுவாகும்.

பிபாவின் 22ஆவது உலகக் கிண்ணத் தொடர் கட்டாரில் நடைபெற்றது. 32 நாடுகள் பங்கேற்ற இந்தத் தொடரின் இறுதியாட்டம் நேற்றிரவு கட்டாரில் நடைபெற்றது.

விறுவிறுப்பாக ஆரம்பமான இந்தப் போட்டியில் முதல் பாதியில் ஆர்ஜென்ரீனா அணி ஆதிக்கம் செலுத்தியது. 23ஆவது நிமிடத்தில் லயனல் மெஸ்ஸி கோல் அடித்து அசத்தினார். 36ஆவது நிமிடத்தில் ஏஞ்சல் டி மரியா கோல் அடித்தார். முதல் பாதி ஆட்டம் நிறைவடையும் வரை பிரான்ஸ் அணியால் கோல் போட முடியவில்லை.

இடைவேளையின்போது 2 - 0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா அணி முன்னிலை வகித்தது. பிரான்ஸின் ஆட்டம் அவ்வளவுதானா என்று ரசிகர்கள் நினைத்திருந்த நிலையில் இரண்டாவது பாதி ஆட்டத்தை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தார்கள் பிரான்ஸின் வீரர்கள்.

ஆர்ஜென்ரீனாவின் கோல் பரப்பில் பிரான்ஸ் ஆதிக்கம் செய்தபோதும், 80ஆவது நிமிடத்திலேயே அந்த அணியால் முதல் கோலை போட முடிந்தது. அந்தக் கோலை அடித்த நட்சத்திர வீரர் எம்பாப்பே மறு நிமிடமே - 81ஆவது நிமிடத்திலேயே இரண்டாவது கோலைப் போட்டார். இதனால், ஆட்டத்தில் அனல் பறக்க ஆரம்பித்தது.

எனினும், போட்டி நிறைவடையும் வரை இரு அணிகளாலும் மேலதிக கோலை அடிக்க முடியவில்லை. இதனால் போட்டி 2 - 2 கோல்கள் என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இதனால், மேலதிக நேரம் வழங்கப்பட்டது.

108ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி தனக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை கோலாக்கினார். ஆர்ஜென்ரீன வீரர் ஒருவர் அடித்த பந்து பிரான்ஸின் கோல் காப்பாளரின் கைகளில் பட்டு திரும்பவே அந்தப் பந்தை கோல் ஆக்கி அதிர்ச்சி கொடுத்தார் மெஸ்ஸி.

அனல் தெறித்த போட்டியில் 118ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் எம்பாப்பே தண்டனை உதை வாய்ப்பு ஒன்றை கோல் ஆக்கினார். இதனால், போட்டி மீண்டும் 3 - 3 என்ற கோல்கள் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதைத் தொடர்ந்து சமநிலை தவிர்ப்பு உதை மூலமாக வெற்றி - தோல்வியை கணிக்க முடிவு செய்யப்பட்டது. இதில், ஆர்ஜென்ரீனா 4 - 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தை தன்வசமாக்கியது.

போட்டியில் தங்கக் காலணி விருது பிரான்ஸின் எம்பாப்பேக்கு வழங்கப்பட்டது. தங்கக் கையுறை விருதை ஆர்ஜென்ரீனாவின் கோல் காப்பாளர் டி. மார்ட்டினஸ், தங்கப் பந்து விருதை லயனல் மெஸ்ஸியும் வென்றனர்.

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் 3ஆவது இடம் குரோஷியா வசம்!

டோஹா, டிசெ. 19

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் மொராக்கோவை வீழ்த்தி மூன்றாவது இடம்பெற்றுள்ளது குரோஷியா.

கட்டாரில் நடக்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் மூன்றாம் இடத்துக்கான போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் மொராக்கோ மற்றும் குரோஷியா அணிகள் மோதின.

கலீபா சர்வதேச மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் குரோஷியா அணியின் நட்சத்திர வீரர் லூகா மோட்ரிச்சுக்கு 162ஆவது போட்டியாக அமைந்தது. இதனால், அதிக எதிர்பார்ப்பு நிலவிய நிலையில், ஆட்டத்தின் 7ஈவது நிமிடமே அந்த எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் குரோஷியா வீரர் ஜோஸ்கோ க்வார்டியோல் முதல் கோல் அடித்தார்.

அடுத்த இரண்டாவது நிமிடத்தில், அதாவது ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் மொராக்கோ வீரர் அக்ரஃப் தாரி பதில் கோல் அடிக்க ரசிகர்கள் கூட்டம் ஆர்ப்பரித்தது. குறிப்பாக முதல் இந்த இரண்டு கோல்களும் தலையால் எடுக்கப்பட்டவை.

முதல் பாதிக்கு முன்னதாக, ஆட்டத்தின் 42ஆவது நிமிடத்தில் குரோஷியா வீரர் மிஸ்லாவ் ஓர்சிக் கோல் அடித்து தனது அணியை 2 - 1 என முன்னிலை பெறவைத்தார். இதன்பின் இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டாலும் கோல்கள் எதுவும் அடிக்கப்படவில்லை.

இறுதியில் குரோஷியா 2-1 என்ற கோல் கணக்கில் மொராக்கோவை வீழ்த்தியது. இந்த வெற்றியின் மூலம், குரோஷியா மூன்றாவது இடத்தைப் பிடித்தது. (ஐ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.